உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 30 | விரோதிகிருது - ஐப்பசி – 10-11-71 | இதழ் 12

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்

## அறுமுகச் சிவன்

"சிவனொடொக் குந்தெய்வம் தேடினு மில்லை அவனொடொப் பாரிங் கியாவரு மில்லை" என்பது முதலியவற்றால் சிவபரத்துவம் உண்மை நூல்கள் பலவற்றிலும் இனிது விளங்கிக் கிடத்தல் யாவரும் அறிந்தது. 'படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்' என்னும் ஐந்தொழிற்கும் முதல்வன் அவனே என்பதைத் தெரிவிப்பனவே அப்பெருமானது ஐந்து திருமுகங்கள். அஃதாவது, படைத்தற் சத்தி, காத்தற்சத்தி முதலாகச் சொல்லப்படுகின்ற ஐந்து சத்திகளே சிவபெருமானுக்கு ஐந்து திருமுகங்களாய் அமைந்தன.

"அஞ்சினால் பொலிந்த சென்னி
அதிகைவீ ரட்ட னீரே"

என்று நாவுக்கரசர் சிவபெருமானுக்குத் தனிச் சிறப்பாகிய ஐந்து திருமுகம் உடைமையை எடுத்துக் கூறிப் போற்றினர்.

'பிரமன் உலகிற்குத் தந்தை' என்ற ஒரு பெயரைப் பெற்றமை காரணமாக ஐம்முகம் பெற்றமை பற்றித் தன்னையும் சிவனேடொப்பவனுகக் கருதி செருக்குற்ற காரணத்தால், ஒரு தலையை இழந்து நான்முகனுகி, நால்வேதங்களை ஓதிக் கொண்டிருப்பவனுயினுன்

சிவபெருமானுக்கு இவ்வாறு ஐந்து முகங்களே எங்கும் சொல்லப்பட்டாலும், ஆருவது முகமும் உண்டு என்பது அருமையாக ஓரோர் இடத்தில் சொல்லப்படுகின்றது. ஐந்து முகங்கள் கிழக்கு முதலிய நான்கு திசைகளில் நான்கும், உச்சியில், மேல்நோக்கி ஒன்றுமாக உள்ளன என்றும், ஆருவது முகம் கீழ்நோக்கி நிற்பது என்றும் சொல்லப்படுகின்றன. கீழ்நோக்கியிருப்பதால் அதற்கு, 'அதோமுகம்' என்பது பெயர். இதனை,

'அறிஞராயோர் சிந்திக்கும் தொல்லை முகம்'

என்கின்றது கந்தபுராணம்.

"அண்டமோ டெண்டிசை தாங்கும் அதோமுகம்"

என்பது திருமந்திரம்.

இயல்பாகவே சிவபெருமானுக்கு இங்ஙனம் ஆறு திருமுகங்கள் இருப்பினும், அதோமுகம் தோன்ருது நிற்க, தோன்றி நிற்பன ஐந்து திருமுகங்களே. ஆகவே, அப்பெருமான் தனது அறுமுக வடிவத்தைப் பலரும் கண்டு களித்துப் பயன் பெறுதற்பொருட்டு அளித்த மூர்த்தியே 'குமார தெய்வம்' என்று சொல்லப்பெறுகின்ற முருகக் கடவுள்.

திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர் பலரும் தமக்குச் சூரபதுமனுதி அசுரரால் விளைந்த துன்பத்தைச் சிவபெருமானிடம் விண்ணப்பித்து,

"வேதமும் கடந்து நின்ற
விமல,ஓர் குமரன் தன்னை
நீதரல் வேண்டும் நின்பால்
நின்னையே நிகர்க்க என்ருர்"

அஃதாவது, 'எம்பெருமானே, சூரபதுமனுதி அசுரரை அழித்தற்பொருட்டு ஒரு தெய்வக்குமாரனை உம்மோடு முற்றிலும் ஒத்தவனுக உம்மிடத்தினின்றே தோற்றுவித்தல் வேண்டும்' என்று தேவர்கள் வேண்டிக் கொண்டார்கள். அவர்களது விருப்பத்தின்படியே, சிவபெருமான் தோற்றுவிக்கக் கருதிய குமாரனைத் தன்னிடத்து விளங்காது நிற்கும் முகமும் விளங்கும்படி ஆறுதிருமுகங்களை உடையவனுகவே தோற்றுவிக்கத் திருவுளங்கொண்டு, எப்பொழுதும் விளங்கி நிற்கின்ற தனது ஐந்து திருமுகங்களுடன் விளங்காது நிற்கின்ற அதோமுகத்தையும் விளங்கக்கொண்டு ஆறு திருமுகங்களிலும் உள்ள நெற்றிக்கண்ணினின்றும் ஆறு தீப்பொறிகளைத் தோற்றுவித்துப் பின்பு அவையே ஆறுமுகங்களுடன் கூடிய குமாரனுய் விளங்கும்படி அருள்செய்தான். ஆகவே, 'அக்குமாரனுகிய முருகக்கடவுள் ஆறு முகத்தோடு விளங்கும் சிவபெருமானேயன்றி வேறில்லை' என்பது நன்கு விளங்குவதாகும்.

வேத சிவாகமங்களின் உட்கிடையை நோக்காமல், 'காணுபத்தியம், கௌமாரம், வைணவம், சாத்தேயம், முதலியவற்றை வேறு வேறு தனி மதங்களாக்க முயன்ற சிலர்போலல்லாமல், உண்மை யுணர்ந்தோர் யாவரும் "யாதொரு தெய்வம் கொள்ளினும் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனுர்தாம் வருவர்" என்றுதான் கூறினர். அதனுல், முருகப்பெருமானைச் சிவபெருமானின் வேருகக் கருதாது, 'அறுமுகச் சிவன்' என்றே அவர்கள் குறிப்பிடுவார்கள். கச்சிக் குமரகோட்டத்தில் எழுந்தருளியுள்ள குமாரக் கடவுளின் திருவருளை நேரே பெற்றுக் கந்தபுராணம் பாடிய, வடமொழி தென்மொழிகளைக் கரைகண்ட கச்சியப்ப சிவாசாரியார்,

"மறைகளின் முடிவால், வாக்கால்,
மனத்தினுல் அளக்கொ ணுமல்,
நிறைவுடன் யாண்டு மாகி
நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி
அருளொடு சரவ ணத்தின்
வெறிகமழ் கமலப் போதின்
வீற்றிருந் தருளி னுனே"

என்று, 'சிவபெருமானே முருகன்' என்பது குறிப்பால் தோன்றக் கூறியதன்றியும்

" ஏவர்தம் பாலு மின்றி
எல்லைதீர் அமலற் குள்ள
மூவிரு குணனும் சேய்க்கு
முகங்களாய் வந்த "

என்பதனுல், 'பிறர் ஒருவருக்கும் இல்லாது சிவபெருமானுக்கே உள்ள சருவஞ்ஞதை (முற்றும் உணர்தல்) முதலிய ஆறு குணங்கள் அல்லது சத்திகளே முருகனிடத்தில் ஆறு திருமுகங்களாய் அமைந்தன' என வெளிப்படையாகவே கூறினர். மற்றும் ஓரிடத்தில் அவர்,

" ஆதலின் நமது சத்தி
அறுமுகன்; அவனும் யாமும்
பேதகம் அன்றல் "

என்று உமாதேவிக்குச் சிவபெருமானே திருவாய் மலர்ந்தருளியதையும், வேருேரிடத்தில் வீரவாகு தேவர் சூரபதுமனிடத்தில்,

" ஈசனே அவன் ஆடலால்
மதலை ஆயினன்காண்;
ஆசிலா அவன் அறுமுகத் துண்மையால்
அறிநீ '

என்று கூறியதையும் எடுத்துக் கூறினர்.

அருணகிரிநாதரும், தமது அனுபூதியில்,

" நாதா குமரா நமஎன்று அரனர்
ஓதாய் என ஓதிய தெப்பொருள்தான் "

என்று ஓரிடத்தில் கூறினராயினும்; அதிற்றுனே மற்றேரிடத்தில்,

" உதியா மரியா உணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா "

என்று சிவபெருமானது இறைமைக் குணங்கள் இனிது விளங்க எடுத்தோதி, 'அப்பெருமானது புதல்வனாய் அக் குணங்களின் வடிவாய் விளங்குபவன் முருகன்' என்பது பெற அருளினர். முருகனது அருளை அடைந்தோர் பலரும் அப்பெருமானை இவ்வாறு அறுமுகச் சிவனாகவே கண்டு வணங்கினமை தெளிவுற விளங்குகின்றது.

சாத்தேய மதத்தினர்போலல்லாமல் அம்பிகையின் அருளைப்பெற்ற அருளாளரும் அம்பிகையைச் சிவபெருமானது அருள்வடிவாகக் காண்பதன்றி வேருகக் காண்பதில்லை. அபிராமியின் அருளைப்பெற்ற அபிராமிபட்டர், இலக்கியச்சுவைபட வஞ்சப் புகழ்ச்சியாக,

" விரும்பித் தொழும் அடி யார்விழி
நீர்மல்கி, மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்த மாகி,
அறிவிழந்து,
சுரும்பிற் களித்து, மொழிதடு மாறி,முன்
சொன்ன எல்லாம்
தரும்பித்தர் ஆவ ரென்றல், அபிராமி
சமயம் நன்றே "

எனக் கூறியதன் உட்பொருளையும், 'முருகன், ஆறெழுத்து அடக்கிய அரிய மந்திரத்தை நா அயல் மருங்கின் நவிலப்பாடி வழிபடும் அந்தணர்கட்குமட்டுமின்றி, மலைச்சாரலில் பலியிட்டு வெறியாடும் வேடர்களுக்கும் அருளுகின்றான்' என்று நக்கீரர் கூறியதுபோல, அம்பிகையும், சுருதிகளின் பணையும், கொழுந்தும் பதிகொண்ட வேருமாய் இருப்பினும், வாம மதத்தவர், சாத்தேய மதத்தினருக்கும் அருள் புரிகின்றாள்' எனக் கூறுதற்கு அம்மதங்களின் வழிபாட்டு முறையில் அம்மைக்குச் சில பெயர்களைக் கூறியிருத்தலையும் அறிந்து கொள்ள முடியாமல் அவரை வாம மதத்தில் நின்றவராகக் கருதி அவரைப்பற்றி எவ்வெவற்றையோ பலர் கூறினர். ஆயினும், அவர்,

" ... ... ... ...கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும்
பகீரதியும் படைத்த

புனிதரும் நீயும் என் புந்தி எந்நாளும்
பொருத்துக"

என்றும்.

" வெவ்விய காலன் என்மேல் வரும்போது,
வவ்விய பாகத்து இறைவரும் நீயும்
மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும்
... ... ...வெளி நிற்க"

என்றும் வேண்டும் முகத்தால், அப்பனைவிட்டு அம்மை ஒரு காலத்தும் நீங்காத தன்மையைக் குறித்திருத்தலை நினைத்துப் பார்ப்பவர் எத்துணைப்பேர்!

அப்பனின் வேருகாது அவனது சத்தியாய் நிற்கும் அம்மையைப் போலவே, அவர் குமாரனுகிய முருகனும் ஐம் முகச் சிவனின் வேருகாது அறுமுகச் சிவனேயாகின்ருன். அதனுல், ஆலவாய்ச் சொக்கன் ஆன்மார்த்த மூர்த்தியாக விளங்கும் திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தில் அறுமுகக் கடவுளும் சிறப்புற்று விளக்குகின்ருன். இவ்வா தீனத்திற்கு உட்பட்ட வேளூர்த் திருக்கோயிலில் முத்துக் குமாரன் சிறப்புற்று விளங்கி நித்திய நைமித்திகங்களை இனிது ஏற்று அருள்புரிதலைக் காண்கின்ருேம். இவ்வாதீ னத்தின் ஆருவது குருமகாசந்நிதானம் அவர்கள் வேள்வி மலைக்கு எழுந்தருளியபொழுது அங்குள்ள முருகக்கடவுள், ஒரு பக்கத்தில் காணப்படாது நின்ற வள்ளிநாயகியாரை முன் அழைத்து காட்சியளிப்பித்ததை க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழ் எடுத்து விளக்குகின்றது. ஐந்து வயது வரையில் ஊமையாயிருந்து பின் செந்தில் ஆண்டவன் அருளால் ஊமைநீங்கி அப்பொழுதே கந்தர் கலிவெண்பாப் பாடிய குமரகுருபரர் இவ்வாதீன முனிவர் என்பதை அறியா தார் யார்? அவரிடம் கல்விகற்ற வெள்ளியம்பலவாண முனிவர் தம்மிடம் பேரிலக்கணங்களைக் கற்ற சிவப்பிரகாசரைச் செந் தில் முருகன்மீது நீரோட்டக யமக அந்தாதி பாடச் செய் தார். மைசூர் மன்னர் வேண்டுகோளுக்கு இசைந்து கந்த புராணச் சுருக்கம் பாடித் திருச்செந்தூரில் அரங்கேற்றி,

அம்மன்னரால் சிறப்புப் பலபெற்ற சம்பந்த சரணலய சுவாமிகள் இவ்வாதீனத்தவரே என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

அறுமுகச் சிவனை வழிபடுதற்கு மிகச்சிறந்த நாட்களாகிய மகாசஷ்டி நாட்களில் இவ்வாதீனத்தின் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தங்கள் ஆதீனத்தைச் சேர்ந்த மாயூரம் குமரக்கட்டளை, வேளூர்த் தேவஸ்தானம் முதலிய இடங்களில் மகாசஷ்டி விழாச் சிறப்பாக நடைபெறத் திருவுளம் பாலிப்பதுடன், அவ்விழா நாட்களில் ஆண்டுதோறும் திருச்செந்தூருக்கு எழுந்தருளி நோன்பு ஏற்று செந்தில் ஆண்டவனுக்குச் சிறப்பு வழிபாடுகள் பலவற்றை நிகழ்விப்பது பலரும் அறிந்தது.

அண்மையில் வந்த மகாசஷ்டி தினங்களிலும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அவ்வாறு நிகழ்வித்து எழுந்தருளி அறுமுகச் சிவன்றன் அருட்பிரசாதங்களை வழங்கி அனைவரையும் அவனது அருட்கு உரியவராகச் செய்தருளியது, அன்பர்கள் உள்ளத்தில் அகலாப் பேருயுள்ளது. அப்பேற்றின் வழியே அறுமுகக் கடவுளது அருளை அனவரதமும் மறவாத அரும்பெறற் பேற்றினையும் அனைவரும் பெற்று உய்வோமாக.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam Sirkazhi.

"My family and myself had a good Dharsan of the temple. The Superintendent was kind enough to explain to all of us the implications of the temple. My family learnt a lot of the history of the temple. The temple is well kept"

(Sd.) C. K. Namasivayam,
Appellate Asst. Commissioner of
Commercial Taxes.

6—10—71.

# குருவருள்

## அருள் நிலை

"அவனன்றி ஓரணுவும் அசையாது" என்பதை, 'பெரிய ஆப்தர் மொழி' என்கின்றார் தாயுமானவர். அவ்வாறு இறைவன் அணுவுக்கு அணுவாயும், மகத்துக்கு மகத்தாயும் இருந்து அஃதாவது மிகச் சிறிய பொருட்கும் மிகச் சிறிய பொருளாயும், மிகப்பெரியபொருட்கும் மிகப்பெரியபொருளாயும் இருந்து எல்லாவற்றையும் இயக்கி வருவது அவனது அளவில்லாத ஆற்றலாலேயாம். அவ்வாற்றலைத்தான் 'சத்தி' என்கின்றோம்.

சத்தியை அவனிடமிருந்து யாரும் பிரிக்கமுடியாது; அதுவும் எக்காரணத்தாலும் (அவனிடத்திலிருந்து) பிரிந்துபோக இயலாது. இதனால் சிவமும், சத்தியும் ஒன்றை ஒன்று பிரிந்திருந்தல் என்பது எக்காலத்திலும் இல்லை. பிரிந்திருக்கும் என்று எப்பொழுதாவது எக்காரணத்தாலாவது நாம் கருதுவோமானால், அது நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்வதாகத் தான் முடியும். ஏனெனில், 'சத்தி' என்பது பொருளினுடைய தன்மை! 'சிவம்' என்பது பொருள். பொருளினுடைய தன்மை பொருளைவிட்டுப் பிரிந்திருத்தல் எப்பொழுதேனும் உண்டோ? அஃதாவது 'சூடு' என்பது நெருப்பின் தன்மை, அது நெருப்பினின்றும் எப்பொழுதாவது பிரிந்திருத்தல் கூடுமோ? மணம் என்பது மலரினது தன்மை; அஃது எப்பொழுதாவது மலரினின்றும் பிரிந்திருக்குமோ? மற்றும் இன்னோரன்னவைபோலத்தான் சத்தி சிவத்தை விட்டுப் பிரிந்திருத்தல் ஒருகாலத்திலும் இல்லை.

சிவம், சத்தி இரண்டிற்கும் பிரிவு என்பதே இல்லாதபொழுது, (சத்தியை விட்டால் சிவம் என்ன செய்யும்? சிவத்தை விட்டால் சத்தி என்ன செய்யும்?' என்ற கேள்வியே எழுவதற்கு இடம் இல்லை. ஆனால், சத்தி சிவனை விட்டுத் தனியே சென்று அவதரித்ததாகவும், தவம் செய்ததாகவும், பின்பு சிவனை மணம் செய்து கொண்டதாகவும் புராணங்களில் பல இடங்களில் சொல்லப்படுகின்றனவே என்றால், அவையெல்லாம் ஒருவனே அல்லது ஒருத்தியோ தானே சிலவேளைகளில் ஆண்வேடம் பூண்டு ஆண்மகனாயும் சிலவேளைகளில் பெண்வேடம் பூண்டு பெண்மகளாயும் நடிப்பதுபோன்ற அருள் நாடகங்களேயன்றி வேறில்லை. இதனை,

" ஒருவனே இராவணுதி பாவகம் உற்முற் போல "

என்கின்றது சிவஞான சித்தி நூல். இது பற்றியே இவைகளை யெல்லாம், 'கூத்து' என்றும் 'திருவிளையாடல்' என்றும் பெரியோர்கள் கூறுகின்ருர்கள்.

பொருளும், அதன் தன்மையும் ஒன்றைவிட்டு ஒன்று இருப்ப தில்லை என்ருலும், பொருளின் தன்மை பொருளுக்கு உட் பட்டதே. அஃதாவது, 'சூடு' என்னும் தன்மை நெருப்பி னுள்ளே தான் அடங்கி நிற்கின்றது. 'மணம்' என்னும் தன்மை மலரினுள்ளே தான் அடங்கிநிற்கின்றது. இவைபோலத்தான் மக்களுடைய தன்மை அல்லது அவர்களுடைய ஆற்றலெல்லாம் மக்களிடத்திலேதான் அடங்கிக் கிடக்கின்றன. அந்த ஆற்றலை மக்கள் தாங்கள் விரும்பும்பொழுது விரும்பிய வகையில் பயன் படுத்திக் கொள்கின்ருர்கள். ஆகவே, யாவரிடத்தும், சத்தி ஆளப்படுவதாயும், சத்தியை உடையவர் ஆள்பவராயும் உள்ள நிலைமையே காணப்படுகின்றன. சிவம் சத்திகளிடத்தும் அதே நிலைமைதான் உள்ளது. அதனுல் ஆளப்படுவதாகிய சத்தி யைப் பெண்ணுகவும், ஆளுகின்ற சிவத்தை ஆணுகவும் உருவகம் செய்து, அவர்களுக்குள் நாயக நாயகி பாவம் - தலைவன் தலைவி யரது தன்மை - கூறுகின்றனர். நாயக நாயகி பாவம் சொல்லப் படுவதால் அனைத்துலகுக்கும் அவர்களே அப்பனும், அம்மையு மாய் அமைகின்றனர்.

நாயக நாயகி பாவமும், அப்பனும், அம்மையுமாம் தன்மை யும் சொல்லப்படுதலால், உலகத்தார் சிவம் சத்திகளை உலகில் காணப்படும் கணவன் மனைவியர்போல இருவராக நினைத்து அவர்களுக்குள் கோபம் அல்லது ஆசை முதலியவை தோன்றி, அவற்ருல் வினையும் வினைவுகள் பலவும் உண்டாவதாகக் கருதுகின்றனர். உண்மையில் அவர்களுக்குள் அவை ஒரு சிறிதும் இல்லாமையால், அவையெல்லாம் மேற்சொல்லிய அருள் விளையாடல்களேயாகும்.

இவற்ருல் எல்லாம் நாம் இன்றியமையாது அறிந்துகொள்ள வேண்டுவது ஒன்று. ஆண் வடிவில் தோன்றுவது வேறு; பெண் வடிவில் தோன்றுவது வேறு; அஃதாவது, ஆண் வடி வில் தோன்றுவது சிவமேதான்: அதில் 'சத்தி' என்பதே இல்லை என்ருே, பெண் வடிவில் தோன்றுவது சத்திதான்; அதில் 'சிவம்' என்பதே இல்லை என்ருே கருதுதல் கூடாது. ஆண் வடிவிலும் சத்தி இருக்கவே செய்கிறது: இல்லை என்ருல், அதில் செயல் ஒன்றும் நிகழாது; பெண் வடிவில் தோன்றுவதி லும் சிவம் இருக்கவே செய்கிறது: இல்லை என்ருல் அதிலும் செயல் ஒன்றும் நிகழாது என்று இவ்வாறு உணர்தல் வேண்டும்.

உலகத்திலும், ஆடவர் அல்லது ஆண் பிறப்பான உயிர்களில் எல்லாம் சிவந்தான் உள்ளது; சத்தி இல்லை என்றும், பெண்டிர் அல்லது பெண் பிறப்பான உயிர்களிலெல்லாம் சத்தி தான் உள்ளது; சிவம் இல்லை என்றும் கருதுதல் தவருகும். எல்லா உயிர்களிலும், எல்லாப் பொருள்களிலும் சிவமும் சத்தியும் சேர்ந்தே நிற்கின்றன அன்றி, எதுவும் எங்கும் தனித்து நிற்பதில்லை. ஆகவே, கடவுள் வடிவங்களிலும் ஆண் வடிவு, பெண் வடிவு இரண்டும் சிவம், சத்தி இரண்டிற்கும் பொதுவான வடிவங்களே யன்றி, ஆண் வடிவு சிவத்திற்கே உரியது; சத்திக்கு உரியதன்று என்பதும், பெண் வடிவு சத்திக்கே உரியது சிவத்திற்கு உரியதன்று என்பதும் இல்லை. ஆயினும், 'ஆண் வடிவு சிவம்' என்றும், 'பெண் வடிவு சத்தி' என்றும் சொல்வது ஒரு பொதுவான கருத்தேயன்றி, அதையே பெரிதும் வலியுறுத்தி எண்ணுதல் கூடாது. இதனைச் சிவஞான சித்தி நூல் பின் வருமாறு இனிது விளக்குகின்றது.

சத்திதான் நாதமாதி தானுகும்; சிவமும் அந்தச்
சத்திதா ஞதி யாகும்; தரும்வடி வானவெல்லாம்
சத்தியும் சிவமு மாகும்; சத்திதான் சத்தனுக்கோர்
சத்தியாம்; சத்தன் வேண்டிற் றெல்லாமாம் சத்தி தானே.

இவ்வுண்மை சைவ சமயத்தில் நடைமுறையிலும் நன்கு விளக்கப்படுகின்றது. அஃதாவது, இறைவனை அம்மையும் அப்பனுமாக இரண்டு வடிவங்களில் பொதுவாக வைத்து வழிபடினும், மாதொரு கூறன் - அர்த்தநாரீசன் என்னும் முறையில் ஒருபாதி அப்பனும், மற்றொருபாதி அம்மையுமாக இருவரும் ஒரு வடிவில் தோன்றுவதையே சிறந்த வடிவமாகக் கொண்டு வழிபடுதல் சைவ சமயத்திலே உள்ளது. இது சிவமும், சத்தியும் எங்கும், எக்காலத்திலும் வேறு வேருய்ப் பிரிந்து நிற்பதில்லை என்ற உண்மையையே தெளிவுபடுத்துகின்றது.

இறைவனுக்கு முதன்மையாகச் சொல்லப்படும் சிறப்பு மூன்று. அவை, எல்லாவற்றையும் அறியும் பேரறிவும், எல்லாவற்றையும் செய்யவல்ல பேராற்றலும், எல்லா உயிர்களுக்கும் இரங்குகின்ற பேரருளுமாம். இந்த அறிவு, ஆற்றல், அருள் அனைத்தும் அவனது சத்தியே. அவனுக்குத் தனக்கென வேண்டுவது ஒன்றும் இல்லாமையால், அவன் அறிவதும், செய்வதுமாகிய எல்லாம் உயிர்கள்மேல் வைத்த கருணையாலேயாம். ஆகவே, அருளே அவனது சத்தியாகின்றது. அருளே சத்தி என்பதை,

“ அருள்உண்டாம் ஈசற் கதுசத்தி யன்றே;
அருளும் அவனன்றி யில்லை; — அருளின்

றரனன்றே யில்லை ; அருட்கண்ணூர் கண்ணுக்
கிரவிபோல் நிற்கும் அரன் ஏய்ந்து ''

என்று சிவஞான போதமும்,

'' அருளது சத்தி யாகும் அரன்றனக் கருளை யின்றித்
தெருள்சிவம் இல்லை ; அந்தச் சிவமின்றிச் சத்தி யில்லை ;
மருளினை அருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பன், கண்கட்
கிருளினை ஒளியா லோட்டும் இரவியைப் போல ஈசன் ''

என்று சிவஞான சித்தியும் விளக்குகின்றன,

அருளாலே எல்லாவற்றையும் செய்தலால் இறைவன் செய்யும் செயல்கள் யாவும் சத்தியின் செயலாகவே சொல்லப்படுகின்றன-

'' தானே இருநிலம் தாங்கிவிண் ணாய்நிற்கும் ;
தானே சுடும்அங்கி ஞாயிறும் திங்களும் !
தானே மழைபொழி தையலுமாய் நிற்கும் !
தானே தடவரைத் தண்கடற் கண்ணே ''

என்கின்றார் திருமூலர்,

'' அவளால் வந்த ஆக்கம் இவ் வாழ்க்கை யெல்லாம் ''

என்பது சிவஞானசித்தி.

உயிர்களுக்கு இன்பத்தைத்தருவதுமட்டும் அருளன்று. துன்பத்தைத்தருவதும் அருள்தான். துன்பம் தருவது தவறு செய்த உயிர்க்கு ஆகையால், அஃது அதனைத் திருந்தச் செய்தற் பொருட்டாம். ஆகவே, இன்பத்தைத்தருவது நேரே கருணையாகின்றது. துன்பத்தைத் தருவது மறைமுகமாகக் கருணையாகின்றது. இவை முறையே 'அறக்கருணை, மறக்கருணை' எனப்படும். '' ஒன்றவன் றானே '' என்ற திருமூலர் '' இரண்டவன் இன்னருள் '' என்றார். இரண்டு அறக்கருணை, மறக்கருணை.

இன்னும் இறைவன் உயிர்கட்குச் செய்வனவற்றைப் பெரும்பான்மையாக, 'மறைத்தல், அருளல்' என இரண்டாகக்கூறுவர். மறைப்பது 'திரோதான சத்தி' அது மறக் கருணை. அருள்வது அருட் சத்தி, அஃது அறக் கருணை.

இவ்வாறு, 'இறைவன் உயிர்கட்கு எல்லாவற்றையும் தனது அருளாலே செய்கின்றான்' என்று உணர்ந்து அந்த அருள் வழியாகவே அவனை அடைதல் வேண்டும். திருக்குறளில் முதல் அதிகாரமாகிய கடவுள் வாழ்த்தில் இறைவனது பெருமையைக் கூறிய திருவள்ளுவர், இரண்டாவது அதிகாரமாகிய வான் சிறப்பில் இறைவனது அருளின் சிறப்பையே கூறினார். அதனால் அருளது நிலையை உணர்ந்து அதுவழியாக மக்கள் இறைவனை அடைந்து இன்புறுவார்களாக.

# திருவருட்பயன் விளக்க உரை

(மலர் 30, இதழ் 11, பக்கம் 595 - இன் தொடர்ச்சி)

எட்டாவது குறள் :

" வெள்ளத்துள் நாவற்றி, யெங்கும் விடிந்திருளாம்
கள்ளத் தலைவர் கடன் "

எனவரும்,

இதன்பொருள் :- கள்ளத் தலைவர்கடன் - பொய்த்தலைவராகிய உயிர்களது செயலால்; வெள்ளத்துள் நா வற்றி - நிறைந்த நீரிலே நின்றும் நீர் வேட்கையால் நா வறண்டு நிற்றலும், விடிந்து எங்கும் இருள் ஆம்-பொழுது புலர்ந்து பகலவன்தோன்றிய பின்பும் இருளே நிறைந்திருத்தலும் ஆகிய பயன்களே உளவாவனவாம்.

விளக்கவுரை :- " வற்றி " என்னும் வினையெச்சம் எண்ணின் கண் வந்தது. 'நாவற்றியாங்கு' எனப் பாடம் வேறுகவும் ஓதுவர். " விடிந்து " என்பது, 'விடிய' என்பதன் திரிபு. 'விடிந்தும்' என்னும் உயர்வு சிறப்பும்மையும். 'கடனுல்' என்னும் உருபும் தொகுத்தலாயின. " நா வற்றி " எனவும். " இருளாம் " எனவும் வந்தவை ஒட்டணியாய் நின்று, நிறைந்த 'இன்பத்துள் நின்றும் அதனை நுகரமாட்டாது துயருறும் நிலையே உண்டாகும் என்னும் பொருளைக் குறித்தது. 'பொய்த்தலைவர்' என்றது, யாதொரு செயற்கும் தாம் முதல்வராகாது சுதந்திரம் சிறிது மின்றி இருக்கவும், எல்லாவற்றுக்கும் தாமே முதல்வர் எனக் கூறிக்கொள்ளுதலை. 'கடனுல்வற்றி ஆம்' என இயைத்துமுடிக்க. திருவருளை மறத்தலால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது போல்வதோர் இழிநிலை உயிர்கட்கு உளதாயிற்று' என்றவாறு. இவ் விழிநிலை ஆணவ மலத்தொடர்பினுலே உண்டாயது என்க.

ஒன்பதாவது குறள் :

" பரப்பமைந்து கேண்மினிது பாற்கலன்மேற் பூனை
கரப்பருந்த நாடுங் கடன் "

எனவரும்,

இதன் பொருள் :- பரப்பு அமைந்து கேண்மின் - திருவருளை மறந்து தற்போதத்தால் ஐம்புலனை நுகர்தற்கு விரைகின்ற விரைவு அடங்கி, அருளாசிரியர்தம் அருள்மொழியின்வழி நில்லுங்கள் ; இது பாற்கலன்மேல் பூனை கரப்பு அருந்த நாடும் கடன்-

நீவிர் கொள்ளுகின்ற இவ் விரைவு, பாலையுடைய பாண்டத்தின் மேல் அமர்ந்திருக்கின்ற பூனை அந்தப் பாலை உண்ண நினையாமல், அப்பால் இருக்கும் கரப்பான் பூச்சியைப் பிடித்து உண்ணுமாற்றை ஆராய்கின்ற செயல்போல்வது ஆகலான்.

விளக்க உரை :- 'எண்ணம் முற்றிய வழியும் நிரம்புதல் இன்மையும், முற்றாத வழி இரண்டனையும் ஒருங்கிழத்தலும் உளவாமாதலின், அவ்வெண்ணம் கொள்ளத் தக்கதன்று' என்பது இவ்வுவமையாற் பெறப்படுவது. விரைவு, மனோவேகம். கேட்டலுக்குச் செயப்படு பொருள் வருவிக்கப்பட்டது. கேட்டல், இங்கு அதன்வழி நிற்றலின்மேற்று. 'நிற்பின், நிலைத்த பெரும்பயனைப் பெறுவீர்கள்' என்பது குறிப்பெச்சம். பூனை பாற்கலன்மேல் இருத்தல் கூறினமையால் கரப்பு அப்பால் உள்ளதென்பது பெறப்பட்டது. 'பூசை' என்பதும் பாடம். திருவருளை மறத்தலால் உயிர்க்கு வீண் துன்பம் உளதாகின்றது என்றவாறு.

**பத்தாவது குறள் :**

> " இற்றை வரையியைந்து மேதும் பழக்கமிலா
> வெற்றுயிர்க்கு வீடு மிகை "

எனவரும்.

இதன் பொருள் :- இற்றைவரை இயைந்தும் - அன்று தொட்டு இன்றுகாறும் திருவருளோடு கூடியிருந்தும்; ஏதும் பழக்கம் இலா வெற்றுயிர்க்கு - சிறிதும் அதனோடு பழகுதல் இல்லாத வீணை உயிருக்கு; வீடு மிகை - துன்பத்தினின்றும் நீங்குதல் வேண்டாததேயாம்.

விளக்க உரை :- "இற்றைவரை" என்றதனால், 'அன்று தொட்டு' என்பது போந்தது. அன்று - அநாதி. பழகுதல் - அறிந்து நிற்றல். வெறுமை, செயற்பாலதனைச் செய்யாமை. துன்பம், பிறவியாகிய பெருந்துன்பம். வீடு, 'விடுதல்' ஆதலின், அதற்குச் செயப்படுபொருள் துன்பமாயிற்று. 'மிகை' என்றது, அடையவாராமை பற்றி. எனவே, திருவருள் உணர்வின்றிப் பிறவித் துன்பத்தினின்றும் நீங்குதல் கூடாமை கூறியவாருயிற்று.

இவை மூன்று குறள்களாலும் திருவருளை மறத்தலின் குற்றம் வகுத்துக் கூறப்பட்டது.

( தொடரும் )

# பாரதியார் பாட்டு நலம்

திரு. மது. ச. விமலானந்தம் எம். ஏ., அவர்கள்

'பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா' என்றார் பைந்தமிழ்ச் சாரதி பாரதி. அவ்விந்தைக்குரிய 'பாட்டுத் திறத்தாலே இவ் வையத்தைப் பாலித்திட வேண்டும்' எனவும் விழைந்தார். விழைந்தாங்கு, பாட்டாலே நாட்டினை நலமுறவும் செய்தார். அத்தகு ஆற்றல்மிகு பாட்டு அவர் பாட்டு; அதனால் பாட்டுக்கொரு புலவராகவும் அனைவராலும் ஏத்தப்பெறுகிறார். இவர் பாட்டு, கேட்போரைக் கிறுகிறுக்கச் செய்யும்; செவிமடுப்போரைச் சொக்கவைக்கும். இதனாற்றான் ஏனைக் கவிஞர்களைவிட இவர் ஒருவரே மக்கட் கவிஞராக ஓங்கு புகழ்பெற்று ஒளிர்கிறார். இத்தகு ஏற்றத்துக்குரிய இவர் பாட்டுத் திறத்தை - பாநலத்தை - கவியின்பத்தைக்கண்டு மகிழ முனைவதே இக்கட்டுரையின் கருத்தாகும்.

எளிமை நலம்; எடுத்த எடுப்பிலேயே இவர் பாட்டினைப் பற்றி எழும் எண்ணம், எளிமை மிக்கது என்பதே. பண்டிதர்களிடம் சிறையிருந்த செந்தமிழைப் பாமரருக்குரியதாக்கிய வராயிற்றே! ஓரளவு தமிழ்ப் பயிற்சி உடையார்க்கும் நன்கு விளங்கும் வகையில் எளிய சொற்கள் கொண்டு இனிய காவியம் படைப்போனே இதுபோது இன்தமிழுக்குத் தொண்டு செய்த வனவான் என எழுதியவராயிற்றே! இவரது பாட்டு எதை எடுத்துக்கொண்டாலும் புரியாத சொல்லோ அறியாத சொற்றொடரோ; அகராதியின் துணை நாடும் அவசியமோ, ஆன்றோரின் விளக்கம் வேண்டும் இன்றியமையாமையோ இம்மியும் இல்லாத அளவுக்கன்றோ இவர்தம் பாடல்கள் அமைந்துள்ளன. இது இவரது பாவின் தனிச்சிறப்பன்றோ? 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி......' பாலுங்கசந்ததடி படுக்கையும் நொந்ததடி......போன்ற எந்தப் பாடலைத்தான் எடுத்துக்கொள்ளுங்களேன்; அத்துணையும் படித்தமாத்திரத்தில் பொருள் விளங்கும் வண்மையன்றோ அமைந்துள்ளன. இத்தகு வியத்தகு எளிமை – படு எளிமை, இவர் பாட்டின் நலத்துக்கு உயிர்நாடி என்றுணரவேண்டும்.

அருமை நலம்: எளிய பாடல்கள் என்பதால், இவர் பாடல்கள் எல்லாம் வெளிய பாடல்கள் என்று எண்ணிவிடக் கூடாது. பலர், பாரதி பாடலில் கருத்துச் செறிவு காண்பது அரிது, பொருள் வளம் பார்ப்பது தவறு என்றெல்லாம் பேசி வருகின்றனர். சொற்கள் எளிமை என்பதால், பொருள் அருமை இருக்கக்கூடாது - முடியாது என்றெண்ணுதல் அறியாமை. சொல்லும் முறைதான் எளியதேதவிர, சொன்னது அரியது; ஆழ்ந்தது என்றுணரவேண்டும். எளிமையில் இனிமை, இனி மையில் எளிமை - இதுவே பாரதியின் திறம்; இத்திறமே இவர்பா நலத்துக்கு வித்து.

ஆங்கிலமேதை ஜான்சன் 'எல்லோரும் தெரிந்த ஒன்றை மிகமிகப் புதுமையாக அளிக்கவேண்டும்; எவருக்கும் தெரியாத புதுமையான ஒன்றை மிகமிக எளிமையாக அளிக்கவேண்டும்' என்றான். இந்த நெளிவும் சுளிவும் பாரதிக்குத் தண்ணீர் பட்ட பாடு. மேலெழுந்தவாரியாகப் பாரதியின் பாடல்களைப் பார்ப்பவர்க்கு அவரது ஆழ்ந்த கவியுளம் புரியாது; ஆழ்ந்து நோக்குகின்றவர்க்கே அஃது அறியவரும்.

பண்டிதமணி, பாரதி பாடலில் புதைந்து கிடக்கும் புலமை நலத்தை வியந்து பாராட்டி யிருக்கின்றார்: மகாவித்துவான் இராகவையங்கார் பாரதியின் பாட்டுத் திறத்தைப் புகழ்ந்திருக் கிறார். திரு. வி. க. இந்த யுகத்தைப் பாரதியுகம் என்றே பறை சாற்றியுள்ளார். நாவலர் பாரதியார் 'பாரதி பாட்டின் ஓர் அடிக்குக்கூட, எனது தமிழறிவு இணையாகாது' என்று ஏத்தி யுள்ளார். கவிமணி, 'பாட்டுக்கு ஒரு புலவன்' என்று பாடி யுள்ளார். இங்கே பாரதியின் சில வரிகள் சிந்தனைக்குரியன:

'...... தெளிவுதர
மொழிந்திடுதல்! சிந்திப்பார்க்கே
களிவளர உள்ளத்தில் ஆனந்தக் கனவுபல
காட்டல்' (பாஞ்சாலி சபதம்)

'அணிசெய் காவிய மாயிரங் கற்கினும்
ஆழ்ந்தி ருக்குங் கவியுளம் காண்கிலார்' (சுயசரிதை)

நுனிப்புல் மேய்வார்க்குப் பாரதியின்பாட்டு தனிநலம் காட்டாது; ஆழ்ந்து கற்போர்க்கே அரிய பொருளின் அருமைப்பாடு காட் டும். காட்டு சில காண்பாம்.

பாஞ்சாலி சபத - சரஸ்வதி வணக்கப் பாடல், சொல் எளிமையும் பொருள் அருமையும் உடைய அரிய பாட்டாகும்; இஃதொன்று போதுமே பாரதியின் அருமை நலத்துக்கு!

வேதத் திருவிழியாள் - அதில்
மிக்க பல்லுரையெனும் கருமையிட்டாள்.

இவ்வடியில் மறைந்துள்ள அருமையை பாரதியாரே, 'மை, கண்ணுக்கு நல்லது; அழகுங்கூட; ஆனால் அளவுக்கு மிஞ்சிப் பூசினல் விகாரமாகத் தோன்றுவதுடன், கண்ணே போனாலும் போய்விடும்'

நீலத் திரைக்கட லோரத்திலே — நின்று
நித்தம் தவஞ் செய் குமரிஎல்லை.

இதில் ஏதோ தெற்கெல்லையைத்தான் குறிப்பிடுகிறார் என்ற அளவோடு நின்றுவிடக் கூடாது. 'வடக்கே மாலவன் குன்றம்' என்று கூறியது போன்றே, 'தெற்கே குமரிமுனை' என்று கூறியிருக்கலாமே! அங்ஙனம் கூறாது கடலோரத்தில். நின்று, நித்தம் தவம் செய் குமரி' என நீட்டிக் கூறுவானேன், பண்டு இலங்கை, ஆஸ்திரேலியா போன்றவற்றோடு இணைந்து எல மூரியா கண்டமாக இருந்த தென்னாடு, பல கடல்கோள்களால் அழிந்து சிதைந்து சுருங்கி இருக்கின்றதன்றோ? அதனை மேலும் கடல்கொள்ளாது காப்பான் வேண்டியே கடலோரத்தில் கன்னிக் குமரி காவல் செய்கின்றனளாம். உட்கார்ந்து காவல் செய்வதினும் நின்று புரியின் நெடுந்தூரம் கண்ணுக்குத் தென்படுமன்றோ? (கண்கொட்டாது நின்று இலக்குவன் காவல் புரிந்ததைக் கம்பர் கூறுவதை இங்கே நினைந்து பார்க்கவேண்டும்). அன்றியும் ஒருபெண் அமர்ந்துகொண்டு இருப்பின், கடலவன் சினமுறக் கூடுமன்றோ? கடல் அழிக்காது காப்பான் வேண்டிக் காவல் புரிவதோடு, தவமும் செய்கின்றனளாம்; என்றோ ஒரு நாள் செய்யின் பலன் அன்றுமட்டும் தானே! எனவேதான் நித்தம் தவஞ்செய்கின்றனளாம். இத்தகு பொருள் வளமெலாம் எண்ண எண்ணத் தோன்றுமாறு எளிமையாகப் பாடியுள்ளான் இதய கவிஞன் பாரதி. எனவே இவன் பாடல்களை எளிய வெளிய பாடல்கள் என்று ஏமாந்துவிடுதல் கூடாது; கருத்துமண்டிச் செறிந்த அருமையன என்றுணர்தல் வேண்டும்.

(தொடரும்)

# திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

## மூலமும் – உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

**திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை**

( மலர் 30. இதழ் 11 , பக்கம் 604 இன் தொடர்ச்சி )

(அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்)

அருந்துவரை யதரகலை வாணிகுயந்
தழுவுபுயத் தயன்மால் வான
மருந்துவரைச் சிறையரிந்தோ னிமையவருங்
கொதித்தெழுந்த வலிய நஞ்சால்
வருந்துவரை யஞ்சலென மற்றதனை
யமுதாக்கும் வாழ்வே யையாற்(று)
இருந்துவரை வற்றசுகம் யாவருக்குந்
தருமிறையே யெனைக்கா வாயோ. 21

(இ - ள்) அரும் துவர் ஐ அதரம் கலைவாணி குயம் தழுவு புயத்து அயன் - அருமையான பவழம்போன்ற அழகிய செவந்த உதடுகளையுடைய சரசுவதிப் பிராட்டியாரின் கொங்கைகளைத் தழுவும் தோள்களையுடைய பிரமதேவனும், மால் - திருமாலும், வான் அமர் உந்து வரை சிறகு அரிந்தோன் - மேகத்தினை வாகனமாக விரும்பிச் செலுத்துகின்ற (இந்திரன்) ஆகாயத்திடத்தில் எங்கும் இயங்குகின்ற இறகுகளையுடைய மலைகளின் இறகுகளைப் பறக்கமுடியாதவாறு வெட்டி வீசிய தேவேந்திரனும், இமையவரும் - இமையா நாட்டமுடைய தேவர்களும், கொதித்து எழுந்த வலிய நஞ்சால் - ஆரவாரத்துடன் கொதிப்புற்றுத் தோன்றிய வன்மையுடைய ஆலகால விடத்தினால், வருந்து உவரை - துன்புற்று வந்தடைந்த அத்தேவர்களை, அஞ்சல்என - பயப்படாதீர்கள் என்று (அடைக்கலம் தந்தருளி) மற்று அதனை - அத்தேவர்களை அங்ஙனமாகக் கருகச்செய்து கொண்டுவந்த அந்நஞ்சினை, அமுது ஆக்கும் - தனக்கு உணவாக்கொண்டு அருந்திக் கண்டங் கருத்துள்ள, வாழ்வே - எம்பெருஞ் செல்வமே! ஐயாற்று இருந்து - திருவையாற்றில் திருக்கோயில்

கொண்டெழுந்தருளி, வரைவு அற்ற சுகம் - எல்லையற்ற (முடி வில்லாத) முத்திநலத்தினை, யாவருக்கும் - தன்னை வந்தடைந்த எத்திறத்தினருக்கும்: தரும் - இக்காலத்தும் ஈந்தருள் புரியும், இறையே - தேவதேவரே, எ(ன்)னைக் காவாய். அடியவனைப் புரந்தருளுவீராக. (எ - று)

(கு - ரை) துவர் - சிவப்பு (பவழம்). வாணி - வாக்குத் தேவி (கலைமகள்). அரிதல் - வெட்டுதல். கொதித்தல் - மிகைத் தெழல். உவர் - சுட்டுப்பொருளாய் அத்தேவர்களைச் சுட்டி நின்றது. வரை - எல்லை. யாவருக்கும் - அனைவருக்கும். இறை - எல்லாவுயிர்களிடத்தும்சென்று தங்குபவன். காவாய் - காத்தருள்க என்பதாம். மால் - கரியவன் (திருமால்). சுகம் - அந்தம் இல்இன்பம் (அழிவில்வீடு). ஏகாரம் - அசைநிலை

இந்திரன் இறகு அரிந்த வரலாறு :- மலைகளெல்லாம் இறகுகளுடன் பறந்துகொண்டிருந்தனவென்றும் அவற்றி னுடைய சிறைகளை வெட்டி வீழ்த்தினன் என்றும், அந்நிலையில் தவறி மறைந்தன சில மலைகள் என்றும், மைநாக பருவதம் இன்றும் உள்ளது என்றும், அது கடலில் ஒளித்துக்கொண்டது என்றும் கூறுவர்.

இறைவன் ஆலம் உண்டதால் - நீலகண்டன், கறைமிடறன், ஆலம் உண்ட அண்ணல் எனவும் திருப்பெயர்கள் பெறுவர்.

“ நடமாடி யேழுலகும் உய்யக்கொண்ட
நாயகரே யுமதருமை தேருவிட்டீர்
இடமாடி யிருந்தவளும் விலக்கா விட்டால்
என் போல்வார்க்கு உடனிருக்க வியல்வதன்று
திடமாட மதிற்றில்லைக் கோயில் கொண்ட
செல்வரே யுமதருமை தேரு விட்டீர்
தடமாலை முடிசாய்த்துப் பணிந்த வானோர்
நஞ்சுண்டாய் அங்கருநீர் நஞ்சுண் டீரே ”

— 11-ம் திருமுறை.

காவனந்த ரம்மலர்த்தா தளைந்தினவண்
டிசைபயிலக் கமலப் போதில்
தேவனந்தம் பார்ப்பினெடு கண்டுயிலு
மையாரு ! சிறியே னுள்ள(ம்)
மேவனந்த விடர்கெடுத்துத் தெருளுறத்
தோன் றியஞான விளக்கேவேதன்
மாவனந்த யங்குமெழிற் றிண்புயமாற்
கரியசுடர் வடிவுள் ளானே.

22

(இ - ள்) கா வனம் தரம் மலர் தாது அளைந்து இனம் வண்டு இசைபயில - பொழிலிடத்து அழகிதாகப் பருவமுற்று அன்று அலர்ந்து விரிந்த பூக்களிடத்துள்ள தேனைப் பருகி அதன்மாட்டுள மகரந்தப் பொடிகளை யுதிர்த்துப் பூசிக்கொண்டு உள்ள கூட்டமாகிய (கொள்ளையாகிய) வண்டுகளானவை பண் களைப் பாடா நிற்க (பண்ணிளைமிழற்ற) கமலம் போதில் - தாமரை மலரின்கண், தே அன்னம் தம் பார்ப்பினொடு - தெய்வத்தன்மை பொருத்திய அன்னப்பறவைகளானவை தம் குஞ்சுகளோடு, கண் துயிலும் ஐயாறு - உறங்குதலைச் செய்கின்ற வளம் ஆர்ந்த திருவையாற்றில் கோயில் கொண்டெழுந்தருளிய சிவபெரு மானே! வேதன் - பிரமதேவனுக்கும், மா வனம் தயங்கும் எழில் திண்புயம் மாற்கு - இலக்குமி பிராட்டியும் திருத்துழாயும் உறைந்து அணிந்து விளங்குகின்ற அழகிய வலிய தோள்களை யுடைய மகாவிட்டுணுவுக்கும், அரிய சுடர் வடிவு உள்ளானே! - காண்டற்கு முடியாத அழற்பிழம்பாகிய திருவுருத்தாங்கிய பெரு மானே!, சிறியேன் - அறிவில் சிறுமையுடைய எளியேன்றன், உள்ளம் - மனத்தின்கண் உள்ள, மேவு அனந்தம் - பொருந்திய எண்ணில்லாத, இடர் கெடுத்து - துன்பங்களைக் கெடுத்து (காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்) அறுவகைக் குற்றங்களையும் முற்ற வொழித்து). தெருள்உற - தெளிவு அடைய, தோன்றிய - திருவுருஉற்றுத் தோன்றியருளிய, ஞானவிளக்கு ஏ - அறிவுச்சுடரே! தேவரீருடைய திருவடிகளே அடியேற்குப் பற்றுக்கோடன்றிப் பிறிது ஒன்றுமின்றும்.

(கு - ரை) வனம் - திருத்துழாய். பார்ப்பு - குஞ்சு. தயங் கல் - விளங்கல். எழில் - எழுச்சி. சுடர் - பிரகாசம், வடிவு - திருவுரு. கெடுத்தல் - மேல்எழாவாறு செய்தல். அளைதல் - பூசுதல். தெருள் - தெளிவு. ஞானவிளக்கு - அறிவுத்தீபம். (அறிவுச்சுடர்).

" நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில் நலம்
மண்மாண் புனைபாவை யற்று "

எழில் - சமுதாய சோபை, நலம் - அபயசோபை எனவும் படும். உறுப்புநலம், தொகுதிநலம் என்பதனையே விதந்து எடுத்து ஓதுவது உண்டு. வனமாலி - என்பது திருமாலுக் கிட்ட நாமமாம். வடிவு - அழகும் ஆம்.

உள்ளமல விருளோட்டி தெருளூட்டி
யருள்காட்டி யுவந்து வந்தாட்
கொள்ளமல வெனநின்றாள் வணங்கறியே
னெழிற்சுணங்குக் கொங்கை வேற்கட்
கள்ளமலங் குழன்மடவார் மேன்மயலாய்
நாடோறுங் கலங்கி னேன்பூம்
புள்ளமலத் தொடுமுரன்ம தலைமணியை
யாறவருள் புரிகு வாயே. 23

(இ - ள்) உள்ளம் மலம் இருள் ஓட்டி - மனத்திடத்து மன்னிய (மலம்) பாசமாகிய இருளினைத் துரத்தி (ஓடுமாறு செய்து) தெருள் ஊட்டி - தெளிவினை (தெளிவுற்ற ஞானத்தை)த் தந்து, அருள்காட்டி - அநுபவ வாயிலாய்த்தம் அருள் நிலையினை யுணர்த்தி, உவந்து வந்து - திருவுளம் மிகமகிழ்பூத்து எழுந்தருளி, ஆள்கொள் அமல! என - ஆட்கொண்டருளுவாய் நிர்மலமான விறைவா என்று, நின்தாள் வணங்க அறியேன் - தேவரீருடைய திருவடிக் கமலங்களை உள்ளன்புடன் பணிந்து நிற்கவும் அறியகில்லேன். எழில் சுணங்கு கொங்கை - அழகிய தேமல் பூத்த (பசலை பரந்த) கொங்கைகளையும், வேல்கண் - வேல்போன்ற கூரிய கண்களையும், கள் அமல் அம்குழல் - தேன் பொருந்தி நிரம்பிய பூக்களைத்தரித்த அழகிய கூந்தற்காட்டினையும் (உடைய) மடவார்மேல் - இளமங்கையர்களுடைய அவ்வவயவங்களின்மேல் ஈடுபட்டு, மயல் ஆய் - காம மயக்கமெய்தி, நாள்தொறும் - தினமும் தினமும், கலங்கினேன் - இடைவிடாமற் கலங்குதலைப் புரிந்தேன், பூம்புள் அமலத்து ஒடும் - அழகிய வண்டினங்கள் (தூய்மையுடன்) அழுக்கற்று, முரல் - ஆரவாரஞ்செய்கின்ற, மதலை அணி ஐயாற - கொன்றைப் பூமாலையினைத் தரித்தருளிய திருவையாற்றில் எழுந்தருள் சிவபரம்பொருளே, அருள்புரிகுவாய் - (பிறவிப் பெரும்பிணி தவிர்த்து முத்தியங்கரையினை நத்தியடையுமாறு) திருவருள் சத்தியினைத் தந்தருளிக் காப்பாற்றுவீராக. (எ - று)

கு - ரை :- உள்ளம் - உள்ளுதலைச் செய்தலால் உள்ளமெனப் பெயர்போந்தது. அப்பர் உள்ளத்தொகை எனத் தலைப்புக்கொரு பதிகம் பாடியது கண்டுணரற்பாலது. தெருள் - தெளிவு. அமலன் - தூய்மையானவன், அமல் - நிறைவு (செறிவு). மயல் - (மையல் என்பதன் றிரிபு) மயக்கம்; (தெளிவின்மை). குழல் - கரிய கூந்தல். பூம்புள் - வண்டுகள். முரல் - ஒலித்தல். மதலை - கொன்றை. அருள் - சத்திமயமாகிய கருணை.

(தொடரும்)

# திருமந்திரம் - குறிப்புரை

திருக்குறள்வேள்,

திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B. A.,

(மலர் 30. இதழ் 11. பக்கம் 625 இன் தொடர்ச்சி)

## 12. அந்தணரொழுக்கம்

224. அந்தண ராவோர் அறுதொழில் பூண்டுளோர்
செந்தழல் ஓம்பிமுப் போதும் நியமஞ்செய்
தந்தவ நற்கரு மத்துநின் றாங்கிட்டுச்
சந்தியும் ஓதிச் சடங்கறுப் போர்களே.

கு - ரை :- அந்தணராவோர் அறுதொழில் பூண்டுளோர் - அந்தணராகிய அறவோர் பிறப்பை அறுக்கும் தொழிலையுடையவர். செந்தழல் ஓம்பி - முன்னே சொன்னவாறு அக்கினி காரியம் செய்து. முப்போதும் நியமஞ்செய் தம்தவ நற் கருமத்து நின்றாங்கிட்டு - மூன்று வேளைகளிலும் தவறாது தங்களுக்குரிய தவமாகிய நல்லசெயலைச் செய்துவிட்டு. சந்தியும் ஓதிச் சடங்கறுப்போர்களே - ஓத்து எண்ணிச் சடங்கு செய்வோராவர்.

தவமாவது, இறைவனை எண்ணுதல்.

"எத்தவ மாகிலென் எங்குப் பிறக்கிலென்
ஒத்துணர் வார்க்கொல்லை யூர்புக லாமே"

திருமந்திரம் – 1568

அந்தணராவோர் தம் தவமாகிய கருமத்தைச் செய்து பிறவியை அறுப்பவராவர்.

225. வேதாந்தங் கேட்க விருப்பொடு முப்பதப்
போதாந்த மான பிரணவத் துள்புக்கு
நாதாந்த வேதாந்த போதாந்த நாதனை
ஈதாந்தம் எனுதுகண் டின்புறு வோர்களே.

கு – ரை :- வேதாந்தங் கேட்க - வேதத்தின் முடிவான உபநிடதத்தின் உண்மையை அறிய. முப்பதப் போதாந்தமான பிரணவத்துள் புக்கு - விருப்பத்தோடு தத்துவமசி என்ற

முப்பத அறிவின் முடிவான ஓங்காரத்துள் பொருந்தி. நாதாந்த வேதாந்த போதாந்த நாதனை - நாதம் கடந்ததாய், உபநிடதத்தின் உச்சியாய், அறிவுக்கு அப்பாலாய் விளங்கும் தலைவனை, ஈதாந்தம் எனுது கண்டின் புறுவோர்களே - இதுதான் முடிவு என்று எண்ணுது முப்பதத்தையும் கடந்து துரிய நிலையில் விளங்குவோராவர்.

தத்துவ மசி - தத் + துவம் + அசி என்ற மகாவாக்கியத்தின் பொருள் அது நீ ஆகிருய் என்பது. இம்மூன்று பதங்களையும் கடந்தபோது விளங்குவது சிவம் என்றுணர்க. போதாந்தம் - போதம் + அந்தம் அறிவின் எல்லை. நாதத்தின் அந்தம் நாதாந்தம்.

அக்கினிகாரியம் செய்யும் மகாவாக்கியப் பொருளாகிய பிரணவத்துள் ஒடுங்கி இன்புறுவர்.

226. காயத் திரியே கருதுசா வித்திரி
ஆய்தற் குவப்பர் மந்திரமாங் குன்னி
நேயத் தேரேறி நினைவுற்று நேயத்தாய்
மாயத்துள் தோயா மறையோர்கள் தாமே.

கு - ரை :- காயத்திரியே கருது சாவித்திரி - காயத்திரியாய்க் கருதுகின்ற சூரியனுகிய சாவித்திரியை. ஆய்தற் குவப்பர் மந்திரமாங் குன்னி - அதற்குரிய மந்திரத்தை எண்ணிச் செபிக்க அந்தணர் விரும்புவர். நேயத் தேரேறி நினைவுற்று நேயத்தாய் - அன்பாகிய தேரில் ஏறிச்சென்று சிவமாகிய நேயப் பொருளோடு பொருந்தியவராய். மாயத்துள் தோயா மறையோர்கள் தாமே - தனு கரண புவன போகங்களாகிய மாயா காரியங்களை விரும்பாது வென்று விளங்குவர்.

காயத்திரி, ஒளியைக் கோரிச் சூரியனை வணங்குதற்குரிய மந்திரம். ஞேயம் நேயமாயிற்று. ஞேயம் - சிவம் மாயம்-மாயா காரியம்.

அந்தணர் காயத்திரி மந்திரத் துணையால் மாயையை வென்றவராவர்.

227. பெருநெறி யான பிரணவம் ஓர்ந்து
குருநெறி யாலுரை கூடிநால் வேதத்
திருநெறி யான கிரியை யிருந்து
சொரூபம தானேர் துகளில்பார்ப் பாரே.

கு - ரை :- பெருநெறியான பிரணவம் ஓர்ந்து - முத்திநெறியான பிரணவத்தைத் தெளிந்து. குருநெறி யாலுரை கூடி - குரு உபதேசம் பெற்று. நால்வேதத் திருநெறியான கிரியையிருந்து - மகாவாக்கியம் உணர்த்தும் சிவமாகும் அத்துவித நெறியில் அகவழிபாட்டில் இருந்து. சொரூப மதானோர் துகளில் பார்ப்பாரே - பிரம சொரூபம் ஆயினோர் குற்றமற்ற அந்தணர்கள்.

பிரணவம் என்பது, ஒரு வார்த்தை, ஒரு சொல், மௌனம் எனப் பல பெயர் பெறும். இஃது அ - உ - ம் - விந்து - நாதம் என்று ஐந்து பிரிவாகவுள்ளது. அஃதாவது, ஓம் என்ற ஓசையை மானதமாக எழுப்பும்போது அது மூலாதாரம் தொடங்கிக் கண்டத்தின்மேல் ஒளியாகவும் அமைகிறது என்று யோகிகள் கண்டனர். கண்டத்திலிருந்து வைகரி வாக்கோசையுடன் வெளியே பாய்வதைத் தூலப் பிரணவம் என்றும், வெளிச் செல்லாது கபாலம் நோக்கிப் பாய்வதைச் சூக்குமப் பிரணவம் என்றும் கூறுவர். தூலப் பிரணவம் கிரியையில் விளங்குவது. சூக்குமப் பிரணவம் தியானப் பொருளாய், பெரிய உபதேசமாய், வேதாந்த இலட்சியமாய், சித்தாந்த முடிவாய், சகல மதத்தினரும் தொழும் வணக்கப் பொருளாய் உள்ளது என்பதையும் உணர்க. துகள் - குற்றம்.

பிரணவத்தை எண்ணி அமர்ந்திருப்பவர் பிரம சொரூபம் பெறுவர். 4

228 சத்திய முந்தவம் தான்அவன் ஆதலும்
எய்த்தரும் இந்தியம் ஈட்டியே வாட்டலும்
ஒத்த உயிர்கள் உண்டா யுணர்வுற்றுப்
பெத்தம் அறுத்தலு மாகும் பிரமமே.

சத்திய முந்தவம் தான்அவன் ஆதலும் - மெய்ப்பொருளை அகத்தில் நோக்கித் தற்போதம் இழந்து. எய்த்தரும் இந்தியம் ஈட்டியே வாட்டலும் - இளைப்பினைத்தரும் இந்திரியங்களைப் புலன்களின் வழிச் செல்லாது தடுத்தும் - ஒத்த உயிர்கள் உண்டா யுணர்வுற்று - இருவினை ஒத்த உயிர்களாய் ஞானம்பெற்று. பெத்தம் அறுத்தலுமாகும் பிரமமே - பந்தத்தை நீக்கிப் பிரமம் ஆவர்.

தான் அவன் ஆதல் - அகநோக்கால் தன் முனைப்புக்கெடுதல். தனக்கென ஒரு செயலுமின்றி எல்லாம் சிவன் செயல் என எண்ணியிருத்தல். இதுவே "ஏகனாகி இறைபணி நிற்றல்" என்பது சிவஞானபோதம்.

பிரணவத்தை உணர்ந்தோர் கட்டின்றிப் பிரமமாவர். 5

(தொடரும்.)

# இருவகைப் புணர்ச்சியில் : : எழுத்துப்பேறும் சாரியையும்*

டாக்டர். திரு. சோ. ந. கந்தசாமி M A., M. Litt. Ph.D.

( மலர் 30, இதழ் 11, பக்கம் 633 இன் தொடர்ச்சி )

6. **பெயரெச்சம் :-**

அ. 'செய்த' வாய்பாடு 210
ஆ. எதிர்மறைப் பெயரெச்சம் 224, 372 (?)

7. **வினையெச்சம் :-**

அ. செயவென் எச்சம் 204 ? 209
ஆ. 'செய்யிய' வாய்பாடு 210
இ. 'செய்யா' வாய்பாடு 222
ஈ. 'செய்து' வாய்பாடு 236
உ. 'செய்யூ' வாய்பாடு 265
ஊ. 'செயின்' வாய்பாடு 333
எ. குறிப்புவினையெச்சம் 237

8. **இடைச்சொல் :-**

அ. சுட்டிடைச்சொல் முதலியன 204, 205, 206, 207, 208, 238, 255, 256, 334, 380, 381, 427, 428.
ஆ. எனவென் எச்சம் 204
இ. 'அன்ன' உவமக்கிளவி 210
ஈ. 'ஆங்க' உரையசைக்கிளவி 204
உ. 'அம்ம' உரைப்பொருட்கிளவி 210, 212
ஊ. இனி, அணி என்னும் காலமும் இடமும் உணர்த்தும் இடைச்சொல் 236
எ. தேற்ற எகரம், சிறப்பின் ஓ 273
ஏ. மாறுகொள் எச்சம், வினா, எண் பொருளில் வரும் 'ஏ' 275
ஐ. மாறுகொள் எச்சம், வினா, ஐயம், ஒழியிசைப்பொருளில் வரும் 'ஓ' 290, 291
ஒ. மன், சின் முதலிய அசைநிலைகளும், ஆன், ஈன் என்ற இடப்பொருள் உணர்த்தும் இடைச்சொல்லும் 333

9. உரிச்சொல் :- 316

10. அடுக்கு :- 214, 215

11. மரூஉ முடிபுகள் :- 111, 172, 250, 251, 355, 482, 483.

இவற்றை நோக்குங்கால், அல்வழிக்கண் எழுவாய்த் தொடர் தான் மிகுதியும் பயின்றுவரக் காண்கிறோம். இளம்பூரணரும் 'அல்வழி என்றது பெரும்பான்மையும் எழுவாயினை' (பக்கம் 40) என்று எழுதுதல் காண்க.

தொல்காப்பியர் வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத் தொகை, அன்மொழித் தொகைகளை அல்வழித்தொடர்களாக ஆளவில்லை. எனினும் நச்சினார்க்கினியர்,

" நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும்
அடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய "

(தொல். புணர். - 110)

எனவரும் நூற்பா இத்தொகைகள் புணரும் இயல்பினைச் சுட்டு மென விளக்கினர். ஆயினும், தொல்காப்பியர் குறிப்பு, பண்பு, இசை முதலிய பொருள் உணர்த்தும் குறைச்சொற்கிளவியும் (-உரிச்சொல்), ஐம்பாலறியும் பண்புதொகு மொழியும் (-பண்புத் தொகை), தொழில்தொகு மொழியும் (-வினைத்தொகை), தம்முன் தாம் வரும் எண்ணின் தொகுதியும், பிறவும் மரூஉ வழக்குகளை ஒத்தியங்கும் என்றும், அவை புணரும் தன்மை இடம் விளங்கத் தோன்றா என்றும் இயம்பினர். (தொல்; எழுத்து 482). மரூஉ முடிபுகளை ஆசிரியர் அவ்வழித் தொடராகக் கொண்டிருத்தலின், ஈண்டுரைத்த தொகைகளும் பிறவும் அல்வழித் தொடர்க ளென்றே கருதினாராதல் வேண்டும். பவணந்தியாரும் போலி, மரூஉ மொழிகளின் புணர்ச்சியைப் புறநடையாற் கொண்டார் (239).

எழுத்துப்பேறும் சாரியையும் :-

வேற்றுமை, அல்வழி என்ற இருவகைப் புணர்ச்சிக்கும் உபகாரப்படுவன எழுத்துப்பேறும் சாரியையும் என்பதை,

" எழுத்தே சாரியை ஆயிரு பண்பின்
ஒழுக்கல் வலிய புணருங் காலை " (தொல், எழுத்து-112)

எனத் தொல்காப்பியர் தெளிவுறுத்தினர்; "எழுத்துப்பேறு யாப்புடைமையானும் எழுத்தினுற் சாரியை யாதலானும் எழுத்து முற்கூறினர்" என நச்சினர்க்கினியர் எழுதுதல் காண்க. நன்னூலார் எழுத்துப்பேறு தனியே கூறவில்லை; கூறுமைச் குரிய காரணம் பின்னர் விளக்கமுறும்.

**சாரியைப்பேறு :-**

சாரியை – உரையாசிரியர் விளக்கம் : தொன்னூலும் நன்னூலும் ஒருங்கேற்கும் சாரியையினைப் பற்றிப் பல்வேறு உரையாசிரியர்கள் கொண்ட கருத்துக்களை முதற்கண் நோக்குவோம்.

**1. சேனுவரையர் :-**

" புணரியனிலை - புணரியலது நிலை; ஆண்டுப் பொருணிலைக்கு உதவுதலாவது எல்லாவற்றையும் என்புழி வற்றுச் சாரியை நிலைமொழிப்பொருள் அஃறிணைப்பொருள் என்பதுபட வருதலும், எல்லா நம்மையும் என்புழி நம்முச் சாரியை அப்பொருள் தன்மைப் பன்மை என்பதுபட வருதலுமாம். அல்லனவும் தாம் சார்ந்து வரும் மொழிப்பொருட்கு உபகாரம் உடையவாய் வருமாறு ஓர்ந்து கொள்ளப்படும். அல்லாக்கால் சாரியை மொழி ஆகா என்பது (தொல். சொல். இடை 252.).

**2. நச்சினர்க்கினியர் :-**

" சாரியை என்றதன் பொருள் வேருகி நின்ற இருமொழியும் தம்மிற் சார்தற்பொருட்டு இயைந்து நின்றது என்றவாறு" (தொல். எழுத்து. 118).

சாரியை பொருளற்ற உருபனே (Empty morpheme) என்பார் கருத்தினைப் பண்டை உரையாசிரியர் உடன்படார்; இக்கு, உம், கெழு முதலிய சாரியைகள் பொருள் பயத்தலை நச்சினர்க்கினியர் குறித்துள்ளார்.

(அ) ஆடிக்குக் கொண்டான்.........இஃது இடப்பொருட்டு (தொல். எழுத்து. 126),

(ஆ) வில்லும் திங்களும் போலும் என்பதற்கு வில்லிடைத் திங்கள் போலுமென ஏழன் உருபு விரித்துப் பொருள்உரைக்க. மாநிதிக் கிழவனும் போன்ம் (அகம். 66) இதற்குக் கிழவனைப் போன்மென உரைக்க. (தொல். எழுத்து 482).

(இ) கான்கெழு நாடு (அகம். 98) இதற்குக் கானைக்கெழீஇய என உரைக்க, இன்னும் இதனானே இச்சாரியை யது உகரக்கேடும் எகர நீட்சியும் கொள்க. 'பூக் கேழ் தொடலை நுடங்க எழுந்து' (அகம் 28) " துறைகேழ் ஊரன் கொடுமை நாணி " (ஐங்கு 11) இவற்றிற்கு இரண்டாவதும் ஏற்புழி மூன்றாவதும் விரிக்க. (தொல் எழுத்து 482).

குறிப்பு :- இக்குச் சாரியை 'கு' என நின்று நான்கன் உருபாற்ற லுடன் ஏழன் பொருள் பயத்தலின், அதனைப் பழைய வேற்றுமை உருபென்று கருதலாம். 'கிழங்கு மணற்கு ஈன்ற முளை" (அகம்) என்புழி கு ஏழன்பொருளில் போந்ததெனச் சேனாவரையர் கூறுதல் நோக்கத்தகும். இங்ஙனமே, 'ஆன்' சாரியையும் 'ஆன்' உருபாகவே கருதும் இடங் களும் உள்ளன. 'பரணியாற் கொண்டான்' என்புழி, ஏழன் பொருள் பயத்தல் காண்க. 'காலத்தினாற் செய்த நன்றி' என்புழி, 'ஆன் உருபு' அப்பொருளிற் போந்தது. 'ஆன்' இடப்பொருள் உணர்த்தும் எனத் தொல்காப் பியரே கருதியுள்ளார் (எழுத்து 333). ஆன் + கு — ஆங்கு (— இடப் பொருள்) என்றாயிற்று.

### 3. அடியார்க்கு நல்லார் :-

சாரியை யாவது சொல் தொடர்ந்து செல்லும் நெறிக்கண் நின்று அதற்குப் பற்றுக்கோடாகச் சிறிது பொருள் பயந்தும் பயவாததுமாய் நிற்பது ; அவற்றுள் இது (கெழு) சில பொருள் பயப்ப நிற்பது. (சிலம்பு - பதிகம் 61).

### 4. மயிலைநாதர் :-

சாரியையாவன அன், ஆன் முதலாக எடுத்தோதப்பட்டு எல்லாப் புணர்ச்சிக்கும் பொதுவாய்ப் பெரும்பாலும் இன்னொலியே பயனாக வருவது (நன் - எழுத்து 132)

(வளரும்)

# ஏழாம் திருமுறையில் : : சாத்திர நோக்கு

பேராசிரியர், திரு. கு. சுந்தரமூர்த்தி பி. ஏ..
திருப்பனந்தாள்.

( மலர் 30. இதழ் 11. பக்கம் 633 இன் தொடர்ச்சி )

## 1. வரலாற்றில் சாத்திர நோக்கு :-

இவர் வரலாற்றில் நிகழ்ந்த அருட்செயல்கள் பல, அவற்றில் இரு நிகழ்ச்சிகளைச் சாத்திர நூல்கள் முகந்துள்ளன.

1. முதலையுண்ட பாலனை யழைத்தது : இதனை,

" பாலை நெய்தல் பாடியதும் பாம்பு ஒழியப் பாடியதும்
காலனை யன்று ஏவிக் கராங் கொண்ட பாலன்
மரணம் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்
கரணம் போல் அல்லாமை காண் "

எனவரும் திருக்களிற்றுப் படியார் எடுத்துரைக்கின்றது.

2, இறைவன் தூது போயது' இதனை,

" மோகம் அறுத்திடின் நாம் முத்திகொ டுப்பதென
ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத் – தோகையர்பால்
தூதாகப் போகவிடும் வன்தொண்டன் தொண்டுதனை
ஏதாகச் சொல்வேன் யான் "

எனவரும் திருக்களிற்றுப் படியார் எடுத்துரைக்கின்றது.

## 2. திருமுறையில் சாத்திர நோக்கு :-

பன்னிரண்டு திருமுறைகளும் சிவஞான போதத்திலமைந்த பன்னிரண்டு நூற்பாக்களோடும் ஒத்து எண்ணுதற்குரியன. அந்நிலையில் இவ்வேழாந் திருமுறை சிவஞானபோத ஏழாம் நூற்பாவோடு ஒத்துக்காண்டற்கு உரிமையுடையதாகும். சுந்தரர் இத்தலத்திற்கு எழுந்தருளி அருளிய பாடலொன்று.

" ஐவகை அரையர் அவர் ஆகி
ஆட்சி கொண்டு அவர் நீங்கார்
அவ்வகை அவர் வேண்டுவ தானல்
அவரவர் வழிஒழுகி நான்வந்து
செய்வகை அறியேன் சிவலோகா
தீவணு எரியாடீ
எவ்வகை எனக்கு உய்வகை யருளாய்
இடை மருதுறை எந்தை பிரானே "

சுந்தரர் வலிவலத்தில் எழுந்தருளி அருளிய பாடல் ஒன்று,

" பந்தித்தவ் வல்வினை பற்றறப் பிறவிப்
படுகடற் பரப்புத் தவிர்ப் பானைச்
சந்தித்த திறலால் பணிபூட்டித்
தவத்தை ஈட்டிய தன்னடி யார்க்குச்
சிந்தித்தற் கெளிதாய்த் திருப்பாதம்
சிவலோகம் திறந்து ஏற்ற வல்லானை
வந்திப்பார் தம் மனத்தில் உளானை
வலிவலம் நகர் கண்டு கொண்டேனே "

இவ்விரு பாடல்களும் உயிரது இயல்பை விளக்கி நிற்கின்றன. முன்னைய பாடலில் என்னுயிர் ஐம்பொறிகளின் வயப்பட்டு அவற்றின் ஆணைவழி நின்றதால் செய்வகை அறியாது திகைத்தேன் எனப் புலப்படுத்துகிருர். அடுத்த பாடலில் அத்தகைய உயிரே இறைவனை யணுகி வழிபட்டவாற்ருல் இறைவனது திருவடியைச் சிந்திப்பதற்கு எளிதாயும் சிவலோகம் சேருதற்கு உரிமையுடையதாயும் இருக்கும் திறம் பெற்றதெனக் குறித்துள்ளார். இவ்வாற்ருன் உயிர் சார்ந்ததன் வண்ணமாம் தன்மையுடையதென அறியலாம். இவ்வுண்மையையே.

" யாவையும் சூனியம் சத்து எதிர் ஆதலின்
சத்தே அறியாது அசத்து இலது அறியாது
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா "

எனவருஞ் சிவஞானபோத நூற்பாவும் விளக்கி நிற்கின்றது. உயிர் சத்தோடு கூடி சத்தாயும், அசத்தோடு கூடி அசத்தாயும் இருக்குந் திறமுடைமையால் 'இருதிறன் அறிவுளது' என்ருர், எனினும் அவ்வுயிர் அவ்விரண்டுமன்றித் தனியாகத் தனக்கொரு பெயர் பெற்றும் நிற்கும். அதுவே ஆன்மா (அ) உயிர் என்பதாகுமென்பார் 'இரண்டலா ஆன்மா' என்ருர். இவ்வாற்ருன் இந்நூற்பாவின் பொருண்மையும் மேற்காட்டிய இரு பாடல்களின் பொருண்மையும் ஒத்து நிற்பதை யறியலாம்

3. நெறி வகையில் :-

அப்பர், சம்பந்தர், சுந்தரர். மணிவாசகர் ஆகிய நால்வரும் முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகளையும் விளக்க வந்தவர்கள் என்றல் மரபு. இந்நெறியில் சுந்தரர் யோக நெறியை விளக்க வந்தவராவர். யோகம் - கூடுதல், உயிர் மூலாதாரம் முதலாகிய அறுவகை ஆதாரங்களின் வாயிலாக அக மார்க்கத்தில் நின்று அதன் வழியே இறைவனைக் கூடுதல் யோகமாகும். இதனைத்

“ தேடுவன் தேடுவன் செம்மலர்ப்பாதங்கள் நாள்தொறும்
நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயோர் நால்விரல்
மாடுவன் மாடுவன் வன்கை பிடித்து மகிழ்ந்துளே
ஆடுவன் ஆடுவன் ஆமாத் தூர்எம் மடிகளே ”

எனவரும், பாடலால் சுந்தரர் விளக்குகின்றார். இந்நெறியைச் ‘ சகமார்க்கம் ’ என்றும் கூறுவர்.

“ சகமார்க்கம் புலன் ஒடுக்கித் தடுத்து வளியிரண்டுஞ்
சலிப்பற்று முச்சதுர முதல் ஆதாரங்கள்
அகமார்க்கம் அறிந்து அவற்றின் அரும் பொருள்கள்
[உணர்ந்து அங்கு
அணைந்து போய் மேலேறி அலர்மதி மண்டிலத்தின்
முகமார்க்க அமுதுடலம் முட்டத் தேக்கி
முழுச் சோதிநினைத் திருத்தல் முதலாக வினைகள்
உகமார்க்க அட்டாங்க யோக முற்றும்
உழத்தல் உழந்தவர் சிவன்தன் உருவத்தைப் பெறுவர்”

என வரும் சித்தியார் பாடல் இதனை விளக்கி நிற்றல் காணலாம். சேக்கிழார் பெருமானும் இதனை யுளங்கொண்டு,

“ மன்னவர் திருவும் தங்கள் வைதிகத் திருவும் பொங்க
... ... ... ... ... ...
பொன்னணி மணியார் யோகப்புரவிமேல் கொண்டு
போந்தார் ”

எனக் கூறியுள்ளமையும் ஈண்டு நினைவு கொள்ளுதற் குரியதாகும்.

4. குருவருள் ,-

சாத்திரங்களை எத்துணைதான் ஓதினும் குருவருளால் அன்றி உயிர் வீடுபேறடைய இயலாது. இவ்வுண்மையைச்

சுந்தரரை இறைவன் தடுத்தாண்டு கொண்டருளியவாற்ருல் அறியலாம். ஆசில் அந்தணர்கள் வேருேர் அந்தணர்க்கு அடிமையாதல் யாண்டுமில்லை யென்று பேசிய சுந்தரர், இறைவன் தம்மைத் தடுத்தாட்கொண்டமையைத் தலைக்கீடாகக் கொண்டு உணர்வு தந்து உய்யக்கொண்டான் எனப் பின்னர் பேசுவதைப் பெரிய புராணத்தால் அறியலாம். இதனையே வெளிப்படையாக,

“ மறிசேர் கையினனே மதமாவுரி போர்த்தவனே
குறியே என்னுடைய குருவே உன்குற்றேவல் செய்வேன்
நெறியே நின்னடியார் நினைக்கும் திருக்காளத்தியுள்
அறிவே உன்னை யல்லால் அறிந்தேத்த மாட்டேனே ”

எனவரும் பாடலால் குறிக்கின்ருர். இங்குக் குருவே எனப் போற்றி யுரைத்தமை காண்க.

இத்தகைய குருவருளையே,

“ சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தன்வசன
மாத்திரத்தே வாய்ந்த நலம் வாய்க்குறுமோ – ஆர்த்தகடல்
தண்ணீர் குடித்தவர்க்குத் தாகம் தணிந்திடுமோ
தெண்ணிர் மையாய் இதனைச் செப்பு ’

எனவரும் பாடல் குறிக்கின்றது.

( தொடரும் )

---


## குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச் செய்யும் ஆராய்ச்சிவிளக்கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

**ஆண்டுச் சந்தா :- ரூ. 3—00.**

விலாசம் :— நிர்வாக ஆசிரியர்,
உயர்திருவாளர், T. M. குமரகுருபரன் பிள்ளை
B. A., B. L., அவர்கள்
குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

# " கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

வித்துவான். திருமதி. ப. நீலா

( மலர் 30, இதழ் 11, பக்கம் 619 இன் தொடர்ச்சி )

## 45. பன்றிக்குட்டிக்கு முலை கொடுத்தது

இருளைக் கழுத்தில் வைத்த இறைவன் தன்னிடத்துத் தெளிந்த அன்பினை வைத்த பாணபத்திரன் துணைவி இசையில் வெல்ல வழி செய்தமை கண்டோமன்றோ? இப்போது பன்றிக் குட்டிகளுக்குப் பாலூட்டி அன்பு செய்த திருவிளையாடலைக் காண்போம்.

இமையவர் வேண்ட நஞ்சை இனிமையாய் ஏற்று அக் கருணைக்குச் சான்றாய் அதனைக் கழுத்திலேயே அமைத்துக் கொண்ட அண்ணல் வீற்றிருக்கும் மதுரைக்கு அண்மையில் அலைக்கரம் வீசியாடும் வைகைக்குத் தெற்கில் அமைந்திருக்கும் மூதூர் 'குருவிருந்ததுறை' என்பதாகும். பிரமன், திருமால், இந்திரன் முதலியோர் சிவனை வழிபட்டேத்தும் அச்சிறந்த பதியில் சுகலன் என்றொரு வேளாளனும் அவன் மனைவி சுகலையும் பன்னிரண்டு புதல்வர்களைப் பெற்று அவர்கள் துள்ளித் திரிகின்ற காலத்தே துடுக்கடக்காதவர்களாய் அப்பால கர்களை வளர்த்துவந்தனர்.

### குலத்தொழில் மறந்தனர் :

தந்தை தாய் இருவரும் மறைந்த பின்பு அந்த இளைஞர்கள் ஆண்மை மிக்கவர்களாகிக் காட்டில் வேட்டையாடித் திரியும் போது வெயில்புகாப் புதரொன்றின்கீழ் ஐந்தவித்த அறிஞ னொருவன் தவமியற்றுவதைக் கண்டார்கள். உடனே கைகளைக் கொட்டியார்த்துக் கல்லையும் பரலையும் வாரி அம்மெய்த்தவனின் மெய்நோக வீசினார்கள். தனது தவத்திற்கு இடையூறு செய்த தீயர்களைச் செயிர்த்து நோக்கிய முனிவன் " நீங்கள் தொழுகின்ற தொழிலை (வேளாளர்கள் துறந்தோர், தூயோர் பெரியோரைக்

கண்டால் வணங்கி உபசரிக்கும் பண்புடையர்கள். வேளாண்மை என்ற சொல்லுக்கே உபகாரம் செய்தல் என்ற பொருள் உண்டு) மறந்து வேடர்களானதால், இரக்கமின்றிப் போன நீங்கள் பன்றிக் குட்டிகளாய்ப் பிறந்து மண்ணை உழும் தொழில் செய்து தாய் தந்தையரை இழந்து அவலமுறுங்கள்" என்று கொடிய சாபமிட்டார்.

பாவமே உருக்கொண்டாற்போன்ற பன்னிருவரும் சாபத்தை யேற்று வருந்தி முனிவரது திருவடிகளில் விழுந்து பணிந்து உய்யும்வழி கேட்டனர். கோபத்தைக் கணத்திலகற்றிய தபசியும் "என்னையாளுகின்ற கூடல்நாயகனே உங்களுக்கு அன்னையாகிப் பாலூட்டியருளுவான். பின்பு உங்களை அமைச்சராக்கி ஆனந்த மயமான விடுபேற்றையும் அருளிச்செய்வான் என்று சாபநீக்க வழியும் கூறியமைந்தார்.

அப்பன்னிருமைந்தர்களும் அக்குருவிருந்த துறைக்கு அண்மையிலிருக்கும் காட்டைத் தன்னாட்சியில் கொண்டுள்ள பன்றியரசனுக்குப் பிள்ளைகளாய் அதன்பெடைவயிற்றில் தோன்றினர்.

## வேட்டையாட வனம் வந்தான் வேந்தன் :

மதுரையரசன் இராசராசன் சின்னாட்களுக்குப்பின் இக்கானகத்திற்கு வேட்டை நிமித்தமாய் வந்தான். விலங்குகளின் மறைவிடங்களையறிந்து சொல்லவல்ல ஒற்றர்கள் கால்களில் தொடுதோல் (மிதியடி) பூண்டு விலங்குகளின் பாதச்சுவடுகளைப் பின்பற்றிக் கண்டு காட்டியும் புலியும், பொல்லாப் பன்றியும், மான்களும் நிறைந்த இடங்களையறிந்து கூறியும், மன்னனுக்கு உதவினார்கள். வேட்டைவல்லார் காட்டை வளைத்து வெட்டிச்சரித்து, வலைகளைக்கட்டி, வேட்டைநாய்களைக் காவலுக்கு வைத்துத் தயாராய்நிற்க ; பம்பையும், துடியும், கோடும் வானதிர முழங்க மன்னன் வேட்டையைத் தொடங்கினான்.

பார்வை மிருகங்களைக் காட்டியும், பயில்விளிகூட்டியும் மற்றையோர் வேந்தனுக்குத் துணைவர பலப்பல விலங்குகளும் அஞ்சி அலமந்து அரசன் கணைகளுக்கிலக்காய்ச் செத்துவீழ்ந்தன.

புலியினைத் துளைத்துப் பின் மானைத் துளைத்து உடன் கரடியினைக் குத்தி அடுத்துக் களிற்றின் வயிற்றூடு பாய்கின்ற வாளி முனிவரிடும் சாப மொழியினும் விரைந்து சென்றது என்கிறார் ஆசிரியர். அம்பிற்குத்தப்பிவலையைத்தாண்டியோடும் விலங்குகளை வேட்டைநாய்பாய்ந்து கௌவிவருவது, முன்னாளில்பற்றிய பாசத்தளையினின்றும் தப்பி உய்ந்து செல்லும் சான்றோரைத் தடுத்து அவாவினுள் அகப்படவைக்கும் தையலர்தொழிலை ஒத்திருந்தது.

## பன்றிகள் தங்கும் படப்பைக்கு வந்தான் :

அரசன் இப்படிப் பல விலங்குகளையும் வேட்டையாடிக் கொண்டு அவ்வனத்தின் மேற்றிசையையடைந்தான். அப்போது ஒரு பன்றி ஓடோடிச்சென்று தங்கள் வேந்தனைப் பார்த்து திங்களின் வழிவந்த மன்னன் மிருகங்களையெல்லாம் கொன்று குவித்து வரும் கொடுமையைக் கூறியது. அதுகேட்டுக் களிப்படைந்த பன்றி தன் துணைவியைப் பார்த்து, "இன்று பாண்டியனை எதிர்த்து வாகை சூடுவேன்; இல்லையானல் வீரசுவர்க்கம் அடைவேன். எப்படி இருக்குமோ என்விதி தெரியாது. ஆதலால் நீ உன் புதல்வர்களைப் பாதுகாத்துக் கொண்டிரு" என்று கூறியது. உடனே அப்பெண்ணேனம் பிரிவுத்துயர் தாங்காமல் 'ஆவி உன்னுடன்வர என்யாக்கை மட்டுமே இங்கிருக்கும். அதுவுமன்றி, இக்குட்டிகளை எனக்குவகுத்த தெய்வம் அவைகளைக் காக்கும் வல்லமையறியாப்பாவியோ ! ஆகவே இவைகளைக் காக்கும் பொறுப்பை அவனிடமே விட்டு நானுன்னைப் பின் தொடர்வேன்.' நிழலுக்குத் தனியான செயலுண்டோ? என்று நிதானமாகப்பேசியது.

உடன் பொருக்கென்றெழுந்து தன் பக்கத்தைத் தழுவிக்கொண்டுவரும் பறழ்களைத் தள்ளி உதறிவிட்டுத் தன் காதற்றுணையுடன் இணைந்தது. வராகவீரனும் மானமென்னும் மல்லல்வாம் புரவியேறி தன்னின வீரர்கள் புடைசூழச் சென்று கன்னிநாடனை யெதிர்த்தது.

## பஞ்சவன் படையொடு மோதிய பன்றிப்படை :

பாண்டிய வீரர்கள் அம்புமழையைப் பொழிய சினம்மிகுந்த வராகவீரர்கள் அவர்கள் மேல் பாய்ந்து செம்புனல் வாய்வழிக் கொட்டுமாறு உதைத்தனர். மார்பில் கொம்பைப்பதித்து வதைத்தனர். சிலரை நேரே வகிர்ந்தனர். தாள், தலை, தோள், தொடை, வாள் என்றிவைகள் சிதைந்ததோடில்லாமல் அலரோன் (பிரமன்) வகுத்த நாளும் பலருக்குச் சிதைந்தது வீரர்கள் மிகுந்த கோபத்தோடு பன்றிகளை முசலப்படையால் தாக்கத் தொடங்கினர். அந்நேரம் பெடைப்பன்றி தன் துணைவனிடம் "நம்மோடுவந்த வீரர்களில் பலரும் மாய்ந்தனர். நாமும் இப் போரில் மாய்வதில் என்ன பொருளிருக்கமுடியும்? ஆகவே நாம் பின்னடைந்து தப்பிக்கலாமே" என்று ஆலோசனை கூறியது.

## மானமிழந்தபின் வாழ்வதும்ஏன் :

"நுண்ணறி வுடையராகி நூலொடு பழகினலும்
பெண்ணறி வென்ப தெல்லாம் பேதமைத் தாதலால்"

"உன்னறிவிற்கேற்றவண்ணமே நீயும் உரைத்தாய். ஆனால் மானமுடையோர் அவ்விதம் செய்யார். பன்றிஒன்று, இரண்டு இருள் தூங்குகின்ற வறியவாய்கொண்ட சிங்கங்கள் நிற்கும் நீர்த் துறையில் இறங்கித் தண்ணீர் உண்டு மீளும். ஆனால் ஒரு பன்றி நிற்கும் நீர்த்துறைக்கு இரண்டு சிங்கங்கள் சென்றுவர அஞ்சும்."

"தூங்கிருள் வறுவாய்ச் சிங்க மிரண்டுறை துறையின் மாடோர்
வாங்கிரு மருப்புக் கேழல் வந்துநீர் பருகி மீளும்
வீங்கிரு ளுடற்கா ரேன மொன்றுறை துறையில் வீரந்
தாங்கிரு மடங்க னீர்க்குத் தலைப்பட அஞ்சு மன்றே."

அத்தகைய வீரக்குலத்தில் பிறந்து வைத்து உன்பேச்சைக் கேட்டுப் பின்வாங்கமாட்டேன். இந்தப் பொய்யுடம்பிற்குத்தானே அழிவு! புகழுடம்பிற்கல்லவே? 'நீ இங்கேயே நில்' என்று கூறிவிட்டுத் தன்னினக் கருமாக்கள் பின்தொடர பின்னும் கைக் குந்தார்கொண்ட கைதவனை எதிர்த்தது. கொற்கை வேந்தன் எதிர்த்துவரும் பன்றியின் வீரங்கண்டு வியந்தான். பின் அதனுடன் கடுஞ்சமர் செய்தான். தன்மேல் பாய்ந்த அம்புகளைப் புல்லைக் கடிப்பதுபோல் கடித்து முறித்தது. சிலவற்றைக் கால் கொண்டு தேய்த்தது. மற்றையவற்றை வாலால் சிதைத்தது.

அதுகண்ட அரசன் வலிமைமிக்க களிற்றின் மேலேறிக் கொண்டு முசலப்படையால் பன்றியைத்தாக்க, ஆண்மைமிக்க அப்பன்றியோ விருட்டென்று களிற்றின்மேல் பாய்ந்து வாழை யிளந்தண்டை முறிப்பதுபோல் ஊசலாடும் யானையின் ஒற்றைக் கரத்தை முறித்தது. பின் வேந்தன் தேரிலேற அதனையும் அதனையிழுத்த குதிரைகளையும் பன்றி சிதைக்க - மிக்க சினங் கொண்ட பாண்டியன் தேர்விட்டிறங்கித் தன் கையிருப்புத் தண்டால் பன்றியின் தலையில் மோதினன். அறிவு கலங்கிய பன்றி அங்கேயே விழுந்து மடிந்தது. விண்ணுடு அடைந்த பன்றி யரசனை அரம்பையர் எதிர்கொள்ள அவனும் அவர்களைத் தழுவி ஆனந்தம் பெற்றான்.

## பெண் என்ன செய்வாள் - பேதை :

தன் துணை பிரிந்தவுடன் பெண் பன்றி பஞ்சவனை எதிர்த்தது. பெண்ணுடன் போர் செய்தல் கூடாது என அமைச்சர் தடுக்க, வேடனாகிய சருச்சரனை ஏவினன் வேந்தன். நெடுநேரம் அவனோடு போராடியபின் அவன் வயிற்றைக் குத்திச் சரித்தது. இறந்துபட இருக்கும் அவனும் தன்கை உலக்கையால் அதனைக்

கொன்று பின் மாண்டான்.

இப்படியாக வேட்டை முடிந்து காவலன் மதுரை திரும்பினன். பன்றி விழுந்த இடம் இன்றும் பன்றிமலையாய் நிற்கிறது. அதோடு அங்கே முனிவர்கள் ஐந்தடக்கித் தவமியற்றி வீடுபெறு நோற்பர் - என்று அகத்தியர் கூறி நிறுத்தினர்.

## பன்றியின் பழங்கதை :

அறிவிலாப் பன்றி விழுந்த இடத்திற்கு இத்துணை மதிப்பா ? அப்பன்றிக்கு இவ்வளவு சிறப்பா என்று கேட்டுக்கொண்டிருந்த முனிவர்கள் தமிழிற் கிறைவனிடம் ஐயவினு விடுத்தார்கள்.

முன்னொருசமயம் மன்மதனை நிகர்த்த வித்யாதரனொருவன் புலத்திய முனிவர் இயற்றிக்கொண்டிருந்த தவத்திற்கிடையூருக இசைப்பாடலைப்பாட அவர் அவனுக்கு இப்படிச் சாபங்கொடுத்தார். பின்னர் மனம் வருந்தி அவன் மன்னிப்புக்கேட்க, புலத்தியர் “ இராசராசபாண்டியன், நீயிருக்கும்காட்டில் வேட்டையாட வந்து நின்னையும் கொல்லுவான். பின் நீ பழைய வடிவம் பெறுவாய்” என்று அருளிச்செய்தார். ஆகவே அம்மலை இன்று முனிவர் இருக்கவும் சிவபெருமான் கொலுவிருக்கவும் தகுதி பெற்றது என்று முனிவர்களின் ஐயத்தைக் களைந்தார் அகத்தியர்.

## தாயாய் வந்து தயவு காட்டினன் :

தாயையும் தந்தையையும் ஒருங்கே இழந்து பன்னிரு பன்றிக் குட்டிகளும் பட்ட துன்பத்தை யார் விரிக்கவல்லார்? ஓடுவனவாய், உழல்வனவாய், தாய் முலை தேடுவனவாய், திகைப்பனவாய்த் தவித்த குட்டிகளை அங்கயற்கண்ணியோடு வந்த அழகன் கண்டான். அக்குட்டிகளுக்காக மனமிரங்கி ஈன்ற தாயாய் இன்முலை சுரக்க அவைகளை நெருங்கினர்.

தாயைக்கண்ட பறழ்கள் ஆவலுடன் ஓடிவந்து அதனைத் தாவிப் பிடித்துக்கொண்டு தழுவி, மோந்து, முட்டி. முதுகுறத் தாவி ஆர்வத்துடன் அமுதமுண்டன. ஏனத்தால் காணமுடியாத பரம்பொருள் இங்கேயோர் ஏனவடிவுகொண்டு அக்குட்டிகளுக்குப் பாலுடன் பலத்தையும், திறத்தையும், ஞானத்தையும், நற்குணங்களையும் கொடுத்தருளினர்.

முகத்தை மட்டும் பன்றியின் வடிவமாக இருக்கச்செய்து மானிட யாக்கையைப் பன்னிருவருக்குங் கொடுத்துக் கங்கை நாயகன் மறைந்தருளினன். பன்றிக்குட்டிகளுக்குப் பாலூட்டி அவர்களைப் பகுத்தறிவுடைய மக்களாகவும் மாற்றி அவர்களுக்கு நல்வினைப்போகத்தையும் தந்தவன் அனைத்துயிர்க்கும் தாயாகி நின்று காக்கும் தயாபரன்தானே !

(வளரும்)

# கவிமணியின் கவிதைகள்

செஞ்சொற்கொண்டல், புலவர்
சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling.,

அரசுபாராட்டு :

இந்த நூற்றாண்டில் எழுந்த கவிதைகளில் கவிமணி திரு. சி. தேசிகவிநாயகம்பிள்ளையின் பாடல்கள் புகழ்பெற்றபாடல்கள். 'கவிமணி' என்று அப்பெரும்புலவரைப் பாராட்டிக் களித்தது தமிழ்கூறு நல்உலகம். கி. பி. 1895ல் இவருடைய முதல் கவிதை நூலாகிய அழகம்மை ஆசிரிய விருத்தம் வெளிவந்தது. அது முதல், கி. பி. 1957 வரை இக்கவிஞர் இயற்றிய கவிதைகள் பல. இவருடைய இசைப்பாடல்களைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் பாராட்டிச் சிறப்பித்தது. 'குழந்தைச் செல்வம்' என்னும் இவருடைய கவிதைத் தொகுப்பு சென்னை அரசுக் கல்வித் துறையினரால் பரிசு அளித்துப் பாராட்டப்பட்டது.

ஆராய்ச்சிப்பனுவல்கள் :

ஆராய்ச்சி வகையில் கவிமணியவர்களின் பணிகளும் பல. 1922ல் மனோன்மணீயம் இரண்டாம் பதிப்புப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்களால் வெளிவந்தபோது துணை புரிந்தார் கவிமணியவர்கள். "மனோன்மணியத்தின் மறு பிறப்பு" என்ற திறனாய்வுக் கட்டுரையை எழுதியிருக்கின்றார். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேரகராதியின் மதிப்பியல் உதவியாளராக இருந்தார். கம்பராமாயணம், திவாகரம், நவநீதப் பாட்டியல் முதலிய பல நூல்களின் ஏட்டுப்பிரதிகளைத் தேடித் தொகுத்திருக்கின்றார். 'காந்தளூர்ச்சாலை' பற்றிய ஆய்வுநூல் இவரால் தமிழகம் 1936ல் அடைந்த நற்பேறு எனலாம். 'நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்' என்ற அரிய நூலை எழுதி உதவினார். உமார் கயாம் பாடல்களை ஆராய்ந்து அவற்றை அழகுற மொழிபெயர்த்து வெளியிட்டார். இப்பெரும் புலவருடைய வசன இலக்கியங்களாகக் கருதத்தக்க 'கவிமணியின் உரைமணிகள்' 1953ம் ஆண்டு வெளிவந்தது. இவ்வாறு கல்வெட்டு ஆராய்ச்சி தமிழ் இலக்கிய வரலாற்று ஆராய்ச்சி ஆகிய பலவகைகளிலும் கவிமணியவர்கள் பெரும்புகழ் பெற்றுள்ளார்.

## கவிதைச் சிறப்பியல்பு :

கவிமணியவர்களின் கவிதைகளைப் பிறருடைய கவிதைகளினின்றும் எளிதில் இனங்கண்டு கொள்ளலாம்; ஆம்; எளிய நடை; எளிய சொற்கள்; இனிமையான சந்தம்; உள்ளத்திற் பதியக் கூடிய உறுதியான சொற்கள்; குழந்தைக்கும் புரியக்கூடிய தொடர் அமைப்பு, எவர்க்கும் அறிந்து இன்பம் ஊட்டக் கூடிய அழகிய உவமைகள் - இவற்ருலேயே கவிமணியவர்களின் கவிதை சிறந்து நிற்கின்றது. 'வெண்பா' முதலிய பழைய யாப்பு வகைகளைக் கையாண்ட தனித்திறம் உடையவர் கவிமணியவர்கள். இவ்வளவு பழங்கிண்ணத்திலும் இவ்வளவு புதிய விருந்து படைத்திட முடியுமா என்று சுவைக்கும் உள்ளம் சொல்லிச் சொல்லி வியக்குமளவிற்கு இருந்தன அப்புலவரது அமுதப் பாடல்கள்.

"தேசிக விநாயகத்தின் கவிப்பெருமை
தினமும் கேட்பது என் செவிப் பெருமை"

என்று நாமக்கல் கவிஞர் இந்நல்லிசைப் புலவரை நாவாரப் பாராட்டுவர். 'படித்துப்பழகாத பாமரருக்கும், பாடிப்பருக'த் தக்க பாட்டாகிய கவிமணிப் பாட்டுக்களில், "ஒடித்துப் பொருள் பிரிக்கும் சந்திகள் இல்லை" என்று மேலும் அவர் பாராட்டுவது பொய்யன்று; அநுபவ உரையே ஆம். கவிமணியைப் பாராட்டி 1950ல் இவ்வாறெல்லாம் பாடிய நாமக்கல் கவிஞர், ஒரு பாடலில் கவிமணியவர்களின் உருவத்தையே நம்கண்முன் கொண்டுவந்து அவருடைய கவிதைகளைக் "கரும்பினும் இனிய சொற்கள்" என்று வாயாரப் பாடுகின்ருர்; அவ்வினிய பாடல் இதுவாகும்.

"துரும்பென மெலிந்த தேகம்;
துலங்கிடும் குளிர்ந்த பார்வை;
இரும்பினும் வலிய வுள்ளம்
இனியவே செய்யும் எண்ணம்;
பரம்பொருள் நினைவே காட்டும்
பாரெலாம் பரந்த நோக்கம்;
கரும்பினும் இனிய சொற்கள்
கவிமணி வடிவம் ஆகும்"

ஆம்; கவிமணி யவர்களின் கவிதைகள், அவருடைய உறுதியான பல கொள்கைகளை எடுத்துக்காட்டி, அவருடைய உள்ளம் இரும்பெனத் திண்ணியது ஆதலைக் காட்டுகின்றன.

## பாகுபாடு :

கவிமணியின் கவிதைகள் பின்வருமாறு பாகுபாடு செய்யத் தக்கன : (1) பக்திப்பாடல்கள் (2) இலக்கியம் பற்றிய பாடல்கள் (3) வரலாற்று நோக்குடைக் கவிதைகள் (4) குழந்தைப்பாடல்கள் (5) இயற்கைப் பாட்டுக்கள் (6) உள்ளத்தின் உணர்ச்சி பற்றிய கவிதைகள் (7) வாழ்வியற் போக்குடைக் கவிதைகள் (8) சமூகப்பாட்டுக்கள் (9) தேசியப் பாட்டுக்கள் (10) வாழ்த்துப் பாக்கள் (11) கையறுநிலைக் கவிதைகள் (12) பல்சுவைப்பாக்கள்

## கவிமணியின் கனிந்த பக்தி :

கவிமணியின் பக்திப் பாடல்கள் படிப்போர் "நெஞ்சை உருக்கும் திறம் உடையவை. புல்லும் கூடப் பசுவுக்கு வாய் உறையாகும் ; பூண்டும் மருந்துக்குப் பயன்படும் ; கல்லும் கோயில் கட்டுதற்குப் பயன்படும் ; எளியேன் எதற்குப் பயன்படுவேன் ?" என்று முருகனிடம் மனமுருகிக் கேட்கும் கவிமணி பாடல் நம் உள்ளத்தைக் கரைக்கும் :

" புல்லும் பசுவிற்காம் ; பூண்டும் மருந்திற்காம் :
கல்லும் திருக்கோயில் கட்டுதற்காம் — தொல்லுலகில்
ஏழை எளியேன் எதற்காவேன் ? செந்திநகர்
வாழும் வடிவேல வா " (முருகன் புகழ்மாலை - 1)

இவருடைய அழகம்மை ஆசிரிய விருத்தங்கள் தாயுமானவரது போக்கினை ஒட்டியவை.

கவிமணியின் பக்தி வெறும் சடங்காக - இயந்திர பக்தியாக இருந்ததில்லை : உள்ளம் கனிந்தபோது உண்டாகும் நெஞ்சு நெகிழ்வு உடைய பக்தி அது ; ஆம் ; "கோவில் முழுதும் கண்டேன் - உயர், கோபுரம் ஏறிக்கண்டேன் ; தேவாதி தேவன் யான்- தோழி ! தேடியும் கண்டிலனே " என்று அவர் பாடத் தொடங்குகின்றபோது தம் உள்ளத்தில் சிறு அதிர்ச்சி உண்டாகின்றது. பெரும்புலவர், பக்தி இலக்கியங்களை யெல்லாம் பாரிடைக் கற்றுணர்ந்த கவிஞர் கோவில் முழுதிலும் பரம் பொருளைத் தேடியும் காணவில்லை என்று கூறுகின்றாரே என்று எண்ணத் தோன்றுகிறது. தெப்பக்குளம், தேரோடும் வீதி, சிற்பச்சிலை, சித்திரவேலை, பொன், மணி, வாசம் பொங்கும் பூமாலை, தூபம், தீபம், முதலிய ஒவ்வொன்றாகக் கூறிக் கொண்டே போகிறார் கவிமணி. 'ஏன் இத்தனை தூரம் சொல்கின்றார் என்று நமக்கு எண்ணத் தோன்றுகிறது. கடைசியில்

இரண்டு கவிதைகளைப் படிக்கத் தொடங்கியதுந்தான் இவ்வளவு நேரம் ஏன் நம்மை அழைத்துச் சென்றூர் என்று புலன் ஆகின்றது. கண்ணால் ஒன்றைக் கண்டு, கருத்தை வேறு எங்கோ செல்லவிட்டுப் பண்ணுகின்ற பூசையால் பயனில்லை; பரம் பொருள் உள்ளத்தின் உள்ளே ஒளிர்கின்றுன்; அவனை உணர்ந்து உள்ளத்துள்ளே கண்டு விட்டால், கோயில் உள்ளேயும் காணலாம் என்பது கவிமணி முற்றுய்ப்பு வைக்கும் கருத்து. நாயன்மார், ஆழ்வாராதியர்கள் தம் அருட்பனுவல்களில் வற்புறுத்திய அகப்பூசையைத் தம்முடைய தெளிவான, எளிய, சொல்லாட்சியின் துணைகொண்டு, கிளிக்கண்ணி பாடுவோர் போல, எவ்வளவு மென்மையாக நம் உள்ளங்களில் பதித்து விடுகின்றூர் கவிமணி என்று எண்ணும்போது வியப்பு நம்மை ஆட்கொண்டு விடுகின்றது அன்றே?

“ கண்ணுக் கினியகண்டு — மனத்தைக்
காட்டில் அலையவிட்டு,
பண்ணிடும் பூசையாலே — தோழி!
பயனென்றும் இல்லை,அடி!”

“ உள்ளத்தில் உள்ளான் அடி — அதுநீ
உணர வேண்டும் அடி!
உள்ளத்தில் காண்பாய் எனில் — கோயில்
உள்ளேயும் காண்பாய், அடி”

(கோயில் வழிபாடு - 7, 8)

கோவில் வழிபாட்டின் அடிப்படை உண்மையை இனிமையாக இதயத்துப் பதியவைத்து விடுகின்றூர் கவிஞர்.

## வழிபாட்டிலும் நாட்டுநலம்

குமரித்தாயைக் கும்பிடும்போது கவிமணியவர்கட்கு நாடு தான் முன்னே வருகிறது; “தென்னெல்லை காத்தாளும் தேவி! குமரி, நின் பொன்னடியைக் கும்பிட்டுப் போற்றுகின்றேன்” என்று தொடங்கி, “செந்தமிழ் நாடு ஒன்ருகி”டவேண்டும் என்று, குமரி எல்லை மாநாட்டின் போது வாழ்த்தினர் இவர்; (‘குமரிப்பகவதி’ - காண்க). “பைந்தமிழ்ச் சோலையிலே பாடும் கவிக்குயில்கள்” பெருகுதல் வேண்டும் என்பது இவர் கருத்து. முருகன் புகழ்மாலை - 4) தமிழ்நாட்டின் கவிதைத்தாகம் தணிந்திடலாகாது; தமிழிற் புதிய புதிய கவிதைகளை, மறுமலர்ச்சிக் கவிஞர்கள் பாடிப்பாடிப் பெருக்குதல் வேண்டும் என்பதிலே இவர்க்கிருந்த நாட்டம் இதனுன் இனிது விளங்கும். (தொடரும்)

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னகரம்,

**சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்**

( மலர் 30, இதழ் 11, பக்கம் 629 இன் தொடர்ச்சி )

பதினெட்டு க்ரந்தியையுடையது கங்காவதாரபவித்ரம், கங்கணாகாரமாகச் செய்யவேண்டும். எட்டு நூலில் ஒருமுடிச்சு உள்ளது கந்தபவித்ரம். — சூக்ஷ்மாகமம்.

சிவலிங்கத்திற்கு. 108 எண்ணுள்ளது முதலான நூல்களான பவித்ரமும் த்வாரம் முதலிய பரிவாரங்களுக்கு எட்டு நூல் இழையுள்ள பவித்ரமும், ஆசாரியனுக்கும் தனக்கும் ஒன்பது இழையுள்ள பவித்ரமும் செய்யத் தக்கது.

அதிவாஸமாகவைத்து பவித்ரோத்ஸவம் செய்யவேண்டும். ஒருநாள், மூன்றுநாள், ஐந்துநாள், ஏழுநாள், ஒன்பது நாள்களில் பவித்ராரோஹணம் செய்யலாம்.

ஆடிமாதம் :-

ஆடிமாதத்தில் பூர நக்ஷத்திரத்தின் முதல்நாள் தேவிக்கு ரக்ஷாபந்தனம் செய்யவேண்டும். பூர நக்ஷத்திர தினத்தில் காலையில் கன்னிகைகளுக்குக் காஞ்சனம் முதலியது கொடுக்க வேண்டும். — காமிகாகமம்.

ஸ்னானம் செய்தவர்களான ஒன்பது ஏழு, ஐந்து, மூன்று கன்னிகைகளுக்கு வஸ்திரம் சந்தனம் புஷ்பம் முதலியன கொடுத்து அர்ச்சிக்கவேண்டும் — கௌரீதந்திரம்.

முதலில் மூல தேவியைப் பூஜைசெய்து உத்ஸவ தேவிக்கு அலங்காரம் செய்து புறப்பாடு செய்து தீர்த்தக்கரைக்கு எழுந்தருளச்செய்து, அஸ்திர தேவரை தீர்த்தம் கொடுக்கச் செய்யவேண்டும். பிறகு ஸர்வஜனங்களுடன் ஆலயத்திற்கு வரவேண்டும். தீர்த்தம் கொடுக்காமலும் வீதிப்ரமணத்துடன் உத்ஸவத்தைச் செய்யலாம்.

முதலில் தேவிக்குப் பால் நிவேதனம் செய்துகொண்டு முளைப்பயறு உப்புடன் கூடியது மற்றும் பழம் தாம்பூலம் முதலியன நிவேதனம் செய்யவேண்டும். இது தேவியின் சந்தோஷத்தின் பொருட்டுச் செய்யவேண்டும். ஸர்வகார்ய சித்தியும் ஸர்வேஷ்டப்ராப்தியும் உண்டாகும். —காமிகாகமம்.

விநாயக சதுர்த்தி :-

अथ वक्ष्ये विशेषेण विघ्नेशोत्सवमुत्तमम ।
सर्वपापहरं पुण्यं सर्वलोक सुखावहम् ॥
आदौ तीर्थं विनिश्चित्य तत्पूर्वे पश्चिमेपि वा ।
सप्तमे नवमे वापि तृतीये ध्वजमारभेत् ॥
श्रावणे विघ्नराजस्य चतुर्थ्यन्तं च रथोत्सवम ।
तद्दिने तीर्थकृत्य च पञ्चम्यां वा विशेषतः ॥

— स्वायंभुवागमम्

விநாயக சதுர்த்தியில் விநாயக பூஜைக்கு முதலில் ச்ராவணமாஸ சுக்ல சதுர்த்தியை நிர்ணயம் செய்துகொண்டு அதற்குமுன், ஐந்துநாள் முன்போ ஏழுநாள் முன்போ, மூன்றுநாள் முன்போ துவஜாரோஹணம் செய்யவேண்டும். ச்ராவண மாதத்திய சதுர்த்தியில் ரதாரோஹணம் செய்ய வேண்டும். அன்றே தீர்த்தோத்ஸவம் செய்யலாம். அல்லது பஞ்சமி திதியான மறுதினமும் தீர்த்த உத்ஸவம் செய்யலாம்.

— சுவாயம்புவாகமம்.

சாந்திரமாண ரீதியாக இந்த விநாயக விருதத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

चतुर्थ्यांतु व्रतं पुण्यं प्रोष्ठपन्मासिके सिते ।

— स्कान्दे

பாத்ரபத சுக்ல சதுர்த்தியில் விநாயக விருதமனுஷ்டிக்க வேண்டும். — ஸ்காந்தம்.

मसि भाद्रपदे शुक्ले चतुर्थ्यां गणनायकम् ।

— भविष्यपुराणम्

பாத்ரபத மாதத்திய சுக்ல சதுர்த்தியில் கணநாயகனை (உபாசிக்கவேண்டும்). — பவிஷ்ய புராணம்,

பாத்ரபதம் என்பது சாந்திரமாணப் புரட்டாசி மாதம். இது ஆவணி அமாவாசை கழிந்தவுடன் வருமாதலால் ஆவணிமாத சுக்ல சதுர்த்தியில் விரதானுஷ்டானம் செய்யவேண்டும்.

ஆவணி மாதத்தில் அவிட்ட நக்ஷத்திரம் கூடிய பௌர்ணமியில் இறைவனுக்கு சர்க்கரை பூஜை செய்யவேண்டும்.

— காரணம்

நவராத்திரி :

आश्वयुक्शुक्लपक्षे तु प्रतिपत् नवम्यन्तके ।
प्रतिपद्दिन मारभ्य व्रतोत्सव मारभेत् ॥

— பூர்வகாரணம்.

சாந்திரமாண ரீதியான ஆச்வின மாதத்திய சுக்ல பக்ஷத்திய ப்ரதமை முதல் நவமி முடியவுள்ள (ஒன்பது நாட்களில்) நவராத்திரியில் தேவியை உபாசிக்கவேண்டும்.

— காரணாகமம்.

आश्वयुक् शुक्लपक्षे वा अष्टमी मूलसंयुता ।
सा महानवमी नाम्ना त्रैलोक्येऽतिसुदुर्लभा ॥
अष्टम्यां च नवम्यां च जगन्मातरमंबिकाम् ।
पूजयित्वाश्वयुङ्मासि विशोको जयति द्विषः ॥

— उत्तरकामिकम्

ஆச்வயுக் சுக்ல பக்ஷத்தில் மூல நக்ஷத்திரம் கூடிய அஷ்டமி மஹாநவமி என்று பெயர் இது மூவுலகத்திலும் துர்லபமாகும். இவ்வாறு சுக்லபக்ஷத்திய அஷ்டமியிலோ நவமியிலோ ஜகன்மாதாவான தேவியைப் பூஜைசெய்து சோகத்தை விட்டு சத்ருவை ஜயிக்கிறான்.

— உத்தரகாரணாகமம்.

नाना शक्त्यादि संयुक्त नानायुधादि संयुतम ।
प्रथमादि नवम्यन्तं दिनं प्रति प्रपूजयेत् ॥

— कारणागमम्

அநேக சக்திகளுடன் அநேக ஆயுதங்களுடன் தேவியை புரட்டாசி மாதத்திய சுக்லபக்ஷ ப்ரதமை முதல் நவமி முடிய தினம் தினம் பூஜை செய்யவேண்டும். — காரணகமம்.

மற்றும் அநேக சக்திகளின் ஜபம், பலவிதமான நிவே தனம் பலவிதமான விநோத தரிசனம் இவைகளால் தேவியை சந்தோஷிக்கச் செய்யவேண்டும். இந்த விநோதங்களையும் பூஜை முதலியவைகளையும் பல ஜனங்கள் கண்டு களிக்கும்படி செய்யவேண்டும். வடக்கிலோ, தேவியின் எதிரிலோ, ஈசான பாகத்திலோ அழகாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் துர்க்காலக்ஷ்மீ சரஸ்வதிக்கு ரக்ஷாபந்தனம் செய்து கடஸ்தா பனம் செய்து அதில் அநேக சக்திகளுடன் கூடிய மூன்று சக்திகளின் ஸ்வரூபியான தேவியை சாங்கோபாங்க ப்ரத்யங்கத்துடன் விபவத்திற்குத் தக்கவாறு பூஜை, ஜபம், ஹோமம் உபசாரம், ஸ்தோத்திரம் இவைகளால் ஆராதிக்க வேண்டும். — பூர்வகாரணகமம்.

இரண்டு காலம் ஹோமத்துடன் அன்று அன்று விசேஷ மாக இரவில் அநேக வாத்யகோஷங்கள் கீதங்கள் நர்த்தனம், ஸ்தோத்திரம் இவைகளைச் செய்வதுடன் பல சக்திகளையும் துதித்து வழிபடவேண்டும்.

இவ்வாறு உத்தமபக்ஷமாக ஒன்பது நாட்களில் செய்ய லாம். அடுத்தபடியாக ஏழு நாட்கள், ஐந்து நாட்கள், மூன்று நாட்கள் என்றபடியும் செய்யலாம்.

கஜபூஜை, ஆயுதபூஜையும் செய்து பத்தாவது நாளில் காலையில் கும்பத்தை அநேக வாத்ய கோஷங்களுடன் ப்ரதக்ஷிணமாகக் கொண்டுவந்து தேவிக்கு அபிஷேகம் செய்ய வேண்டும்.

यथा कल्पोक्त मार्गेण नानादेवीं प्रपूजयेत् ॥

— कारणागमम्

தேவியின் பூஜைகளைக் கூறும் தேவி கல்பக்கிரந்தங் களில் கூறியவாறு பல தேவிகளைப் பூஜிக்கவேண்டும்.

(தொடரும்)

# செய்திகள்

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் திருச்செந்தூர் வழிபாடு

திருத்தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஆண்டுதோறும் கந்தசஷ்டி விழாவிற்குத் திருச்செந்தூருக்கு எழுந்தருளி கந்தவிரதம்மேற்கொண்டு ஸ்ரீசெந்திலாண்டவனை வழிபட்டு வருதல்போல இவ்யாண்டிலும் திருச்செந்தூருக்கு எழுந்தருளி கந்தசஷ்டி விழாத் திருநாட்களில் நாடோறும் திருக்கோயிலுக்கு எழுந்தருளி செந்திற்குமரனைத் தரிசித்து இன்புற்றார்கள். 25—10—71 திங்கட்கிழமையன்று சூரசம்மார தரிசனம் செய்து மகிழ்ந்து பாரணை முடித்து தருமைக்கு எழுந்தருளினார்கள்.

## கந்தசஷ்டி விழா

தருமையில் :

தருமபுரம் ஸ்ரீ தருமபுரீசுவாமி திருக்கோயிலில் எழுந்தருளி அருள் வழங்கும் ஸ்ரீ அறுமுகப்பெருமானுக்கு கந்தசஷ்டி விழா நாட்களில் சகஸ்ரநாமார்ச்சனைகள் சிறப்பாக நடைபெற்றன. முருகப்பெருமான் சந்நிதியில் [அகல் விளக்குகள் ஏற்றிவைத்து அழகுறுத்தப்பெற்றன. அர்ச்சனையில் அன்பர்கள் பலர் பங்கு பற்றி வழிபட்டு உய்ந்தனர். 25—10—71 திங்கட்கிழமையன்று முருகப்பெருமான் திருவீதியுலாவும், சூரசம்காரமும், சிறப்பாக நிகழ்ந்தன. அன்பர்கள் பலர் வழிபட்டு உய்ந்தனர்.

## ஆதீனத்திருக்கோயில்களில்

வேளூரில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கு கந்தசஷ்டி விழா 20—10—71 புதன்கிழமை முதல் தொடங்கி 29—10—71 முடிய உள்ள நாட்களில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

21—10—71 வியாழக்கிழமை கற்பகவிருக்ஷம் 22—10—71 வெள்ளிக்கிழமை வெள்ளிஇடும்பன் [23—10—71 சனிக்கிழமை யானை, 24—10—71 ஞாயிற்றுக்கிழமை காமதேனு ஆகிய வாகனங்களில் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி எழுந்தருளி அருட்காட்சி வழங்கியதை அன்பர்கள் பலர் கண்டு வணங்கி மகிழ்ந்தனர். 25—10—71 திங்கட்கிழமை கந்தசஷ்டித் திருநாள். அன்று ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி ஸ்ரீ பாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தியநாதப் பெருமானிடம் வேல் பெறுதலும் சூரனைச் சங்கரித்தலும், பின்னர் மயில் வாகனத்தில் எழுந்தருளலும் ஆகியவை நிகழ்ந்தன. 26—10—71 செவ்வாய்க்கிழமை ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி தீர்த்தம்கொடுத்தருளல் நிகழ்ந்தது. அன்பர்கள் பலர் கந்தசஷ்டித் திருநாளாகிய ஆறு நாட்களிலும் உண்ணுநோன்புகொண்டு, வழிபட்டும் சூரசம்கார தரிசனம் செய்து மயில் வாகனத்தில் பெருமானை வழிபட்டும் மகிழ்ந்தனர். 27—10—71 புதன்கிழமை தெய்வானையம்மை திருக்கல்யாணமும் 28—10—71 வியாழக்கிழமை ஸ்ரீ வள்ளியம்மை திருமணமும், 29—10—71 வெள்ளிக்கிழமை ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேதராக ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருத்தேரில் திருவீதிவலம் வருதலும் நிகழ்ந்தன. அன்பர்கள் பலர் வழிபட்டு உய்ந்தனர்.

கந்தசஷ்டி விழா நாட்களில் ஸ்ரீ ஆறுமுகப்பெருமானுக்கும் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கும் லக்ஷார்ச்சனைகள் நடைபெற்றன. அர்ச்சனையில் அன்பர்கள் பலர் பங்குபற்றி செல்வ முத்துக்குமரன் அருள்பெற்றனர்.

சுவாமி சந்நிதியில் சொற்பொழிவுகள், நாள்தோறும் மாலை 6 மணி முதல் நடைபெற்றன.

20—10—71 புதன்கிழமை தருமையாதீனப்புலவர், மகா வித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் "கந்தரலங்காரம்" என்ற பொருளிலும், 21—10—71 வியாழக்கிழமை தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் புலவர். திரு. இரா. செல்வக்கணபதி அவர்கள் "திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்" என்ற பொருளிலும், 22—10—71 வெள்ளிக்கிழமை தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர் வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் "திருமுருகாற்றுப்படை" என்ற பொருளிலும், 23—10—71 சனிக்கிழமை தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான். சிரோமணி. திரு. வி. சபேசன் அவர்கள் "முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்" என்ற

பொருளிலும், 24—10—71 ஞாயிற்றுக்கிழமை மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்; செஞ்சொற்கொண்டல், வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் M. A, Dip Ling. அவர்கள் "கந்தரனுபூதி" என்ற பொருளிலும் சொற்பொழி வாற்றினர்கள். அன்பர்கள் பலர் கேட்டுமகிழ்ந்தனர்.

ஸ்ரீமத் திருநாவுக்கரசுத் தம்பிரான் சுவாமிகள் சொற் பொழிவுகளின்போது உடனிருந்து, தொடக்கவுரையும் நிறை வுரையும் கூறி அனைவரையும் மகிழ்வித்தார்கள்.

மாயூரம் குமரக்கட்டளையில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான மாயூரம் குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ் தானத்தில் கந்தசஷ்டி விழா 20—10—71 முதல் தொடங்கி 26—10—71 முடிய உள்ள நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற் றது. காலையில் வெள்ளிப்படிச் சட்டத்திலும் 2, 3, 4 ஆகிய திரு நாட்களின் இரவில் கற்பக விருக்ஷம், ஆட்டுக்கடா, இடும்பன் ஆகிய வாகனங்களிலும், 24—10—71 ஞாயிற்றுக்கிழமை இரவு சகோபுரத்தில் ரிஷபவாகனத்திலும் முருகப்பெருமான் எழுந் தருளி அருள்வழங்கினர்.

25—10—71 திங்கட்கிழமை ஸ்ரீ சுப்பிரமணியப்பெருமான் வேல்வாங்குதலும், ஆட்டுக்கடா வாகனத்தில் எழுந்தருளி சூர சம்காரம் செய்தருளலும், வெள்ளி மயில் வாகனத்தில் வள்ளி தேவசேனு சமேதராக அருட்காட்சி வழங்குதலும், 26—10—71 செவ்வாய்க்கிழமை திருத்தேர்த் திருவீதியுலாவும் நிகழ்ந்தன. முருகபக்தர்கள் பெருமானை வழிபட்டு உய்ந்தனர். கந்தசஷ்டி விழாவை முன்னிட்டு நடைபெற்ற லக்ஷார்ச்சனை 25—10—71 திங்கட்கிழமை நிறைவுபெற்றது. அன்பர்கள் பலர் லக்ஷார்ச்சனை யில் பங்குபற்றி முருகப்பெருமான் அருளுக்குப் பாத்திரமாயினர். விழா நாட்களில் நாள்தோறும் மாலை 6 மணி முதல் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

20—10—71 புதன்கிழமை தருமையாதீனப்பல்கலைக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், புலவர். திரு. இரா. செல்வக்கணபதி அவர்கள் 'முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்' என்ற தலைப் பிலும், 21—10—71 வியாழக்கிழமை தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர், திருநெறிச்செம்மல், நல்லிசைப் புலவர், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் 'கந்தரலங்காரம்' என்ற தலைப்பிலும், 22—10—71 வெள்ளிக்

கிழமை தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான். சிரோமணி. திரு. வி. சபேசன் அவர்கள் 'கந்தரனுபூதி' என்ற தலைப்பிலும், 23—10—71 சனிக்கிழமை தருமையாதீனப்புலவர், மகாவித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் 'திருமுருகாற்றுப்படை' என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினார்கள். அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

### தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில்

## நவராத்திரி விழா

சென்னைத் தியாகராயநகரில் உள்ள தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் 20—10—71 முதல் 28—10—71 முடிய நவராத்திரி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. விழாவைத் தொடங்கிவைத்த உயர்நீதிமன்ற நீதிபதி கனம் திரு. ஆர். சதாசிவம் அவர்கள் இந்தியா முழுவதும் கொண்டாடப்படும் விழா நவராத்திரி விழா என்றும், பெண்மையைத் தெய்வமாகப் போற்றும் சிறப்பு நமது இந்துமதத்தின் தனிப் பெருமையாகும் என்றும் குறிப்பிட்டார்கள். முதல்நாள் விழாவிற்குத் தலைமைவகித்த அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன் அவர்கள்

" அறம்கேட்டும் அந்தணர் வாய்மொழி கேட்டும்
மறம்கேட்டும் வானவர் மந்திரம் கேட்டும்
புறம்கேட்டும் பொன்னுரை மேனியெம்ஈசன்
திறம்கேட்டும் பெற்ற சிவகதி தானே "

என்ற திருமூலர் திருமந்திரத்தைக் கூறி அதன்படி நாளும் நல்லவற்றை மக்கள் கேட்டுப்பழகினால் எந்நாளும் நல்லனவே நாட்டில் பெருகும் என்று குறிப்பிட்டார்கள்.

டாக்டர் திரு. இரத்தினவேல் சுப்பிரமணியம், டாக்டர் திரு. எம். நடராஜன், திருமதி சரோஜினி வரதப்பன், பிரதம மகாண மாஜிஸ்ட்ரேட் திரு.எஸ். நடராஜன், திரு.எம்.எஸ்.சாரங்கபாணி முதலியார், முன்னாள் முதலமைச்சர், திரு. எம். பக்தவத்சலம், திருமதி. டி. என். அனந்தநாயகி, டெக்ஸ்புக் கமிட்டி டைரக்டர் திரு. ஆர். சண்முகம் ஆகியோர் ஒவ்வொரு நாள் தலைமைவகித்து அறவுரை வழங்கினார்கள்.

மாயூரம் பிரம்மஸ்ரீ இராமநாத தீட்சிதர் ஒவ்வொரு நாளும் தேவி பாகவதம் பற்றி விரிவுரையாற்றினர்கள். விரிவுரையில் இந்து தர்மம் பற்றியும், விடியற்காலையில் எழுந்து வாயிலில் சாணந் தெளிப்பதால் லக்ஷ்மி கடாட்சம் பெருகும் என்றும், இல்லையேல் மூதேவி வாசம் செய்வாள் என்றும் எல்லா அண்டங்களுக்கும் தலைவியாக இராஜராஜேஸ்வரி பட்டாபிஷேகம் செய்துகொள்ளும்போது தனக்கு ஒரு தலைவர் வேண்டும் என்றும், தக்க தலைவரைத் தேர்ந்து சொல்லுமாறு சபையில் கேட்கப்பட்டபோது, பிரகலாதன், கஜேந்திரன், விபீஷணன், திரௌபதி, அகலியை, துருவன் ஆகிய அறுவரும் நாராயணனே தங்களைக் காப்பாற்றிய கருணையாளர் ஆகையால் அவரையே தேவி தலைவராகக் கொள்ளலாம் என்றனர் என்றும், விஷ்ணு, உபமன்யு, மார்க்கண்டேயர், பிரம்மா, குபேரன், தட்சன், இராமபிரான், தேவதைகள், வேதம் ஆகிய ஒன்பதின்மரும் சிவபரம்பொருளே தேவிக்குத் தலைவராகும் பெருமையுடையவர் என்றனர் என்றும் இதனல் சிவத்தின் சிறப்பு தேவிபாகவதத்தாலும் விளங்குகிறது என்றும் குறிப்பிட்டார்கள். தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும், நன்றியுரையும் கூறி விழாவை நடத்திவைத்தார்கள்.

நிலைய அன்பர்களான, திரு. சந்திரசேகர முதலியார், திரு எஸ். பாலசுப்பிரமணிய முதலியார், திரு. எஸ். சாம்பசிவ ஐயர், திரு. ஆர். சிவஞானம் செட்டியார், திருமதி, மீனாட்சிசுந்தரசிவை திரு. டி. என். உடையநம்பி நாடார், திரு. சுவாமிநாத ஐயர், திரு என். இராமமூர்த்தி ஐயர், ஆகியோர் ஒவ்வொருநாள் சிறப்பு வழிபாட்டை நடத்திவைத்தார்கள். வித்துவான் திரு. ப. வடிவேல் பிள்ளை, வித்துவான், திரு. ந. இராமலிங்கம், சங்கீத பூஷணம், திரு. எஸ். ஞானப்பிரகாசம் ஆகியோர் நாள்தோறும் அபிராமி அந்தாதி பாராயணத்தை இன்னிசையோடு ஓதிச் சிறப்பித்தனர்.

## தேவாரத் திருமுறை வகுப்பின்

## பதினெட்டாவது ஆண்டு நிறைவுவிழா

29—9—71 விஜயதசமியன்று மாலை தேவாரத் திருமுறை வகுப்பின் பதினெட்டாவது ஆண்டு நிறைவுவிழா உயர்நீதி மன்ற நீதிபதி கனம் திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள்தலைமையில் சிறப்பாகக்கொண்டாடப்பெற்றது. நீதிபதி தமது தலைமையுரையில் “ மக்கள் தங்கள் கடமைகளைக் காலத்தில் தவருமல் செய்வதற்கும், ஒழுக்கத்துடன் உயர்ந்த இன்ப

வாழ்க்கை வாழ்வதற்கும் இறைவன் வேத ஆகமங்களை அருளிச் செய்தான். அவற்றின் சாரமாகவே இதிகாச புராணங்கள் முனிவர்களால் எழுதப்பட்டன. அவற்றாலும் மக்கள் பூரண நலம் பெறுமல் போகிறார்களே என்ற கருணையால் தேவாரத் திருமுறைகளையும் திவ்விய பிரபந்தங்களையும் முறையே நாயன் மார்கள் ஆழ்வார்கள் மூலமாக அருளிச்செய்துள்ளான். இவ் வருட்பாசுரங்களைப் பெரியவர்களும் படிக்கவேண்டும். சிறுவர், சிறுமியர்களைக் கட்டாயமாகப் படிக்கச் செய்யவேண்டியது பெற்றோர்களின் தலையாய கடமை. அதிலும் இப்பகுதியில் வாழ்பவர்கள் அதிஷ்டக்காரர்கள். தருமையாதீன மகாசந்நி தானமவர்கள் நிலையம் அமைத்து ஓதுவார் அமைத்துச் சொல்லிக்கொடுக்கிறார்கள். இன்றுமுதல் பிள்ளைகளை அனுப்பி படிக்கச் செய்யுங்கள்" என்று குறிப்பிட்டார்கள். திருமுறை வகுப்பு மாணவர் இருவர் "தேவாரம்" என்பது பற்றி இனிய உரையாடல் நிகழ்த்தினார்கள். தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறிச் சிறப் பித்தார்கள். தேவார வகுப்பு ஆசிரியர் திரு. எஸ். ஞானப் பிரகாசம் கடவுள் வணக்கமும் வாழ்த்தும் பாடினார்.

## வேளூர்க்கிருத்திகைப் பிரசாதம் வழங்கும்விழா

வைத்தீசுவரன்கோயிலில் 10—9—71 கிருத்திகையன்று நடை பெற்ற அபிஷேக அர்ச்சனைப் பிரசாதங்கள் 11—9—71 சனிக்கிழமை மாலை 7 மணிக்கு நிலைய அன்பர் திரு. ஆர். சிவ ஞானம் செட்டியார் அவர்கள் தலைமையில் வேளூர்த் தேவாரம், திருப்புகழ்ப்பிரார்த்தனை நிகழ்த்தி வழங்கப்பெற்றன. வித்வான் திரு. ந. இராமலிங்கம், திரு. எஸ். ஞானப்பிரகாசம் இருவரும் பிரார்த்தனை நிகழ்த்தினர். வித்துவான் இராமலிங்கம் வரவேற் புரையும் நன்றியுரையும் கூறினார். அன்பர்கள் பிரசாதம்பெற்று மகிழ்ந்தனர்.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi

"சீர்காழியப்பர் சீரோடு எல்லோரையும் வாழ வைப்பர் என்று, சொல்லுபவர்கள் எல்லாம் இன்முகத்தோடு சொல்லி, அனைவருக்கும் ஸ்தல வரலாறுகளை விளக்கி, இன்முகத்தோடு வரவேற்கின்றனர். பக்தி தன்னை மறந்து வருமாறு கோவிலைச் சுத்தமாக வைத்திருப்பது பாராட்டத்தக்கது."

31—10—71. ஏ. பி. நாகராஜன்.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

**திரு. K. முத்துஜோதிடர்**

**(விரோதிகிருதுஹு கார்த்திகைமீ 1உ முதல் 29உ முடிய)**

**(17—11—71 முதல் 15—12—71 முடிய)**

விரோதிகிருதுவருஷம் ஐப்பசிமாதம் 30-ந்தேதி செவ்வாய்க் கிழமை இரவு 41 நாழி 2 விஞடிக்கு ஸ்ரீ லோகரக்ஷகரான சூரிய பகவான் துலாராசியிலிருந்து விருச்சிக ராசிக்கு கடகலக்னத்தில் ஸங்கிரமணாீதியில் பிரவேசம் செய்கிறுர். பிரவேசகால பலன் சுபிக்ஷமும் சமஸ்த மங்களமும் உண்டாகும்.

குறிப்பு ;- ஷி கார்த்திகை மாதம் முதல்தேதிமுதல் 4ந்தேதி பகல் 3 மணிவரை விருச்சிகராசியில் சனிபகவானுக்கு 7-ல் சூரியன், சந்திரன், புதன், குரு, சுக்கிரன் ஐவரும் சஞ்சரிக்கிருர் கள். சனிக்கு 7வதாகவும், விருச்சிகராசியாகவும், இருப்பதால் பஞ்சகிரஹ கூடத்தில் விந்தியோத்ர தேசம் பூராவும் அன்னிய நாடுகளும் யுக்த மேகத்தால் சூழப்பட்டு உலகம் பூராவுக்குமே பிரஜைகள் துர்ப்பலனைப் பலவிதத்திலும் அனுபவிக்கும்படிநேரு மாகையால், உலகில் லக்ஷ்மீகடாக்ஷத்தோடு கூடிய ஸஜ்ஜனங்கள் ஆஸ்தீகத்தை மறக்காமல் மனிதத்தன்மையையும் மறக்காமல் பரோபகாரமான கடமைகளைச்செய்து தேவகோபத்தைத்தணிய வைத்து, எல்லோரும் ஆஸ்தீகர்களாய் சந்தோஷத்தை அடைய உதவி புரிய சுபம் ஏற்படும்.

**1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼**

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். ஜீவனம் ஓங்கும். இடம் மாறுதல் ஏற்படும். சஞ்சாரம் ஏற்படும். சரீரத்தில் உஷ்ணம் அதிகத்தால் சில உபாதிகள் உண்டாகும். மேலோர் பெரியோர்களின் ஆசியினல் சகலமும் நன்மையாக முடியும். புதன், வியாழன் சுபமாகும்.

**2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½**

ரிஷபராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். தெய்வீகத் தன்மை ஓங்கும். தானதர்ம பலன்களும் பரோபகாரமான புத்தியும் புதிதாக கிரஹலாபங்களும் உண்டாகும். சிற்சில கிரய விக்கிரயங்களும் உண்டாகும். ஆரோக்கியம் உண்டாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

**3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾**

மிதுனராசி 9 பாதங்களும் மிச்ரமான பலன்களைத் தரும். செலவுகள் அதிகமாகும். அனேககாரியங்கள் ஆரம்பித்து முடியாமல் தடைபட்டுக்கொண்டு இருக்கும். குடும்பத்தில் மங்கள காரியங்களில் செலவுகள் அதிகமாக இருந்துகொண்டு இருக்கும் ஞாயிறு, திங்கள் சுபமாகும்,

**4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.**

கடகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். விவ சாயகாரியங்களில் தவக்கம் ஏற்படும். எதிர்பாராத சிற்சில இடைஞ்சல்கள் ஏற்பட்டு உடனே விலகிவிடும். செவ்வாய், புதன் சுபமாகும்.

**5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼.**

சிம்மராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். தொழில் ஓங்கும். வியாபாரம் விருத்தியாகும். உலகபிரசித்தி ஏற்படும். படிப்பு அதிகமாகப் படித்து பரிசுகள் கிடைக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½.**

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். எதிர் பார்க்கும் காரியங்கள் எல்லாம் முடிந்து அனுகூலங்கள் ஏற்படும். இதுவரையில் பார்க்க முடியாத மேல் உத்தியோகத்தில் உள்ள வர்களைப் பார்க்கநேரிடும். ஆரோக்கியம் உண்டாகும். உலக பிரசித்தி ஏற்படும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾**

துலாராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனைத்தரும். ஸஞ்சாரம் அதிகமாகும். அதிக செலவுகள் ஏற்பட்டு நன்மையும்

கீர்த்தியும் ஏற்படும். ஆரோக்கியம்தரும். பிரியம் இல்லாதவர்கள் எல்லாம் நமக்கு நன்மையையே செய்துகொண்டு இருப்பார்கள். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

## 8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். வரவுசெலவு சமமாக இருக்கும். வியவஹாரம் ஜெயிக்கும். தர்மத்தால் செலவுகள் அதிகமாக இருக்கும். ஸ்தல காரியங்களும் தாமதத்தோடு முடிவடையும். புதன், வியாழன் சுபமாகும்.

## 9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼.

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். வரவு செலவு சமமாக இருந்துகொண்டு இருக்கும். ஸ்திரமில்லாமல் அடிக்கடி ஜீவனம் மாறிக்கொண்டே இருக்கும். குடும்ப சம்பந்தமாய் அதிகம் கவலை உண்டாகும். தெய்வபலத்தால் சகலமும் சாத்தியமாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

## 10. மகரம்– உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். உத்தியோகத்தில் மேல்பதவி ஏற்படும். தனதான்யசமிருத்தி ஏற்படும். நஷ்டமான பொருள் தானாக வந்துசேரும். குடும்பம் ஓங்கும். ஆரோக்கியம் உண்டாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

## 11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾,

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். தொழிலில் அடிக்கடி மாறுதல்கள் ஏற்படும். ஆனாலும் நன்மை ஏற்படும். தூரதேசத்திலிருந்து அழைப்புப் பத்திரமும் வந்து சில நண்பர்களையும் பார்க்கும்படியாகவும் நேரிடும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். குடும்பம் ஓங்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

## 12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுபமானபலனைத்தரும். விவஸாயம் ஓங்கும். புதிதான தொழில் முறையால் லாபம் ஏற்படும். குடும்பத்தில் மங்களகாரியங்கள் நடக்கும். கீர்த்தி உண்டாகும். தெய்வசக்தி அதிகமாகும். ஸ்தலகாரியங்களும் சுபமாகவே நடக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

தருமையாதீனம் வேளூர் தேவஸ்தானம்
இலவச சித்த வைத்திய சாலை

# மூத்திரேந்திரிய ரோகங்கள்

( Diseases of the Urinary Organs )

டாக்டர். திரு. K. இராமகிருஷ்ணன்

( மலர் 30. இதழ் 10. பக்கம் 584 இன் தொடர்ச்சி ).

## 1. மூத்திர குண்டிக்காய் தாபிதம்

இந்த வியாதிகள் கற்பூரதைலம், எரிவண்டு கலந்த மருந்துகள் (Ausenic) சாப்பிடுவதாலும் உண்டாகும். அல்லது பிரமேகம் ஏற்படுவதாலும் அதனுல் கிருச்சனம் கல்லடைப்பு போன்ற வியாதிகள் ஏற்படுவதாலும் குண்டிக்காய் வியாதிகள் உண்டாகின்றன. (Inflamatjin of Kidney). இந்த வியாதிகள் காண்பது மிகவும் அபூர்வம். இதில் காணுகிற கட்டிகள் கரைந்து போகும்; அல்லது சீழ் பிடிப்பதும் உண்டு. சீழ் பிடித்தால் சிறிதும் பெரிதுமாகிய சீழ்க்கட்டிகள் உண்டாகும்.

அறிகுறிகள்:- மூத்திர குண்டிக்காய் ஸ்தானங்களில் வேதனை அதிகரிக்கும். மூத்திரக் குழல் வழியாக வேதனை அதிகம் கண்டு மூத்திரப்பையின் கழுத்துக்குக் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கிக் கொண்டே வரும். அல்லது இரண்டு கவுட்டிகளிலும் பூஜப்பைகளிலும் வலி அதிகரிக்கும். தொடைகள் நடந்து அசைவதினுல் வேதனை அதிகரிக்கும். சில சமயங்களில் தொடைகளில் திமிர் ஏற்படுவதும் உண்டு. சில சமயம் ஆண்களுக்கு பீஜம் மேலுக்கு ஏறி மூத்திரம் அடிக்கடி இறங்கிக்கொண்டே இருக்கும். மூத்திர குண்டிக்காயில் கல் உண்டாகி மூத்திரக்குழல் வழியாக இறங்கி மூத்திரப் பையில் வந்து விழும்போது காணுகின்ற நரம்பு வேதனையை குண்டிக்காய் தாபனவேதனை என்று எண்ணி தவறு செய்யாமல் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளவேண்டும். மேல்கண்ட வியாதிகளோடு ஜுரம், அடிக்கடி வாயில் குமட்டல் உண்டாகி வாந்தி எடுத்தல், தாகம் ஏற்படுதல் ஆகிய குறிகளும் உண்டாகும். நாடி துடிப்பு அதிவேகமாகவும் உண்டாகும். மூத்திரம் குறைந்து சிகப்பு நிறமாக அடிக்கடி இறங்கும். அதில் ரத்தமும் சீழும் கலந்து சில சமயம் வருவதும் உண்டு. வயிறு உப்பிசமும் ஏற்படும்.

சிகிச்சை இந்தக் குறிகளுடன் வியாதிகள் காணும்போது இடுப்புக்கு வெந்நீர் ஒத்தடம் கொடுத்து மல ஜலம் கழிவதற்கு லகுவாகப் பேதிக்குக் கொடுப்பது நல்லது. வேது பிடிப்பதும் நாட்டுப்பழக்கம். வேது பிடித்தால் வியர்வை மூலமாக நீர் வெளிப்பட்டு மூத்திர குண்டிக்காயின் தொழிலை சர்மம் ஏற்று நடத்தும்படி செய்தால் மூத்திர சுரப்பை குறைந்து குண்டிக் காய்க்கு ஓய்வு கொடுக்கலாம்.

தேங்காய்ப்பால், பொடுதலை சார். பிரமி இலைசார் வகைக்கு ஒரு படி யாவற்றையும் ஒன்ருகக் கலந்து காய்ச்சி வடித்து வரு கின்ற தைலத்தை காலை மாலை 1 டீஸ்பூன் வீதம் 3 நாட்கள் 6 வேளைக்கு விட்டு விட்டு சாப்பிட்டுவர மேற்கண்ட வியாதி குணமாகும்.

அரைக்கால் படி எலுமிச்சம்பழச் சாற்றில் 5 சோழி சுட்ட சாம்பலையும் ½ பலம் பொரித்த வெங்காரத்தையும் கலந்து வைத்துக்கொண்டு பாக்கு அளவு பசு வெண்ணையில் ஐந்து நாட்களுக்குச் சாப்பிட குணமாகும்.

பறங்கிப்பட்டை, கெந்தகம், ஜாதிக்காய், கிராம்பு, சிறுநாகப்பூ, ஜாதிபத்திரி, பச்சை கற்பூரம், அமுக்கிராக்கிழங்கு, கொடிவேலி வேர்பட்டை, சடாமாஞ்சில் இவைகள் வகைக்கு அரை பலம் வீதம் இடித்து சூரணம் செய்து அதற்கு சமம் சீனி கலந்து காலை மாலை கால் டீஸ்பூன் அளவு பசு நெய்யில் சாப்பிட்டு வர மேற்கண்ட வியாதிகள் அறவே நீங்கும்.

## நோயாளிகள் குறிப்பு

காரைக்கால்
18—9—71.

எனக்கு 1968-ம் ஆண்டு கல்யாணம் ஆனது. அதிலிருந்து என் மனைவிக்கு வீடு தூரம் ஆகும்போது வயிற்று வலியும், உடல் அசதியும் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. இதோடு நான்கு வருடம் வரையில் கர்ப்பம் தரிக்கவில்லை. நாங்கள் எங்கள் ஊரில் உள்ள ஆஸ்பத்திரியிலும், மற்ற ஆங்கில வைத்தியரிடமும் காண்பித்து எவ்வளவோ மருந்துகள் சாப்பிட்டோம். எங்க ளுக்குக் குழந்தை தரிக்கவில்லை. பிறகு என் மனைவிக்கு அரசாங்க மருத்துவ மனையில் கர்ப்பப்பையைச் சுத்தம் செய்தார்கள். அதன் பிறகும் கர்ப்பம் தரிக்கவில்லை. பிறகு என் நண்பன் மூலமாய் வைத்தீஸ்வரன் கோயிலில் ஒரு சித்தவைத்தியர் இருப்பதை

அறிந்து அவரிடம் வந்தோம். அவர் எங்கள் இருவரையும் பரிசோதித்து மருந்துகள் கொடுத்தார். நாங்கள் அவர் கொடுத்த மருந்துகளை வைத்தியர் திரு. இராமகிருஷ்ணன் சொன்னபடி சாப்பிட்டு வந்தோம். சாப்பிட்ட முதல் மாதத்திலிருந்தே என் மனைவிக்கு நல்ல சுகம் ஏற்பட்டது. பிறகு என் மனைவி கர்ப்பம் தரித்தாள். எங்களுக்கு அவர்கொடுத்த மருந்தாலும் ஆண்டவன் அருளாலும் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. இப்போது எங்களுக்கும் எங்கள் குடும்பத்தில் உள்ளவருக்கும் ரொம்பவும் சந்தோஷம் ஏற்பட்டு டாக்டர் திரு. இராமகிருஷ்ணன் (சித்த வைத்தியர்) அவர்களிடம் நாங்கள் தொடர்ந்து வைத்தியம் பெற்று நன்மை அடைந்து வருகிறோம் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(Sd.) T Veerasamy,
52, Gnanapragasam Street,
Karaikkal.
Pondichery State.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

### Sri Panchanathiswaraswamy Devasthanam, Thiruvaiyaru.

திரு. ஐயாறப்பர் ஆலயத்தினை என் குடும்பத்தோடும் வழக்கறிஞர்கள் திரு. பிச்சை, திரு. மாணிக்கவாசகம் எனது மாமா உயர்திரு. நீ. கந்தசாமி பிள்ளை இவர்களுடனும் பார்க்கின்ற வாய்ப்பு இன்று கிட்டியது. நால்வரால் பாடப்பெற்ற இத்திருத் தலத்தைப் பண்பும் பத்தியும் குறையாதவகையில் வைத்திருக்கும் தருமபுரம் ஆதீனம் போற்றுதற்குரியது. எழில்பெறு மாமண்டபங்களும், அழகுறு சிற்பங்களும், வளர்ந்த மதில்களும் என் கருத்தைக் கவர்ந்தன. என் வழக்கறிஞர் நண்பர் திரு. மாணிக்கவாசகம் "முருகா, முருகா, முருகா" என்று மும்முறை ஒலித்தவுடன் எழுமுறை எதிரொலித்ததைக் கேட்டு நான் வியந்தேன். என்னே பண்டைய தமிழனின் பொறி இயல் வல்லமை!

(Sd.) பு. ரா. கோகுலகிருஷ்ணன்,
30—10—71.
நீதிபதி உயர்நீதி மன்றம்,
தமிழ்நாடு.